IMS0138

உ

சிவமயம்.

# காஞ்சிவாசியாரின்
# மாயாவாதக்கோண் மறுப்பு.

இது

சத்தியவாக்கியராற் செய்யப்பெற்று

திருக்கைலாச பரம்பரை

சூரியனார்கோயில் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின்

மாணாக்கருளொருவரும்

வேதாரணியம்

தமிழ்வேத வித்தியாசாலை மானேஜருமாகிய

வே. நடேசபிள்ளையவர்களால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1913

சிவமயம்.

# காஞ்சி வாசியாரின் மாயாவாதக் கோண்மறுப்பு.

---

வைசியமித்திரனும் மாயாவாதியுமென்று ஒரு வியாசங் காட்டி, லோகோபகாரியைச்சார்ந்துவெளிவந்தகாஞ்சிவாசியாரே! நீர், லோகோபகாரியில் எழுதவந்தது, வைசியமித்திரனில் மாயாவாதி இன்னார் என்னும் விஷயம் எழுதிய நடுநிலை நிற்போர்க்குச் சமாதானந் தெரிவிக்கக்கருதியன்றோ? உமது கருத்து அதுவாயிருக்க, அக்கருத்தையும், அதற்கென்று தயாரித்த அறிவையும்விழுங்கி, வரம்புகடந்த விபரீதமன்றோ முன்னின்றது; அவ்வசப்பட்டன்றோ அனுவசியமாகச் 'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானுண்டி, என்று எழுதினீர். அது நடுநிலைநிற்போர்க்கு எந்தப்பிரமாணங்காட்டி என்னசமாதானஞ்செய்தது. நீரேயோசித்து அச்சொற்கள் அவ்விஷயத்துக்குஎன்னசமாதானஞ்செய்தனவென்பது தெளிவீராக. நீர் எழுதியசொற்றொடரில் சங்கொன்றும் ஆண்டியொருவனுமாகிய உவமானங்களுக்கு உவமேயங்களாகச் சங்கின்றானத்தில் உம்மையும் ஆண்டியின்றானத்தில் நடுநிலைநிற்போரையுமன்றோகொண்டீர். இதனாலேயே உமது புத்தியின்கூர்மைதெளிவாயது, சங்கு சடபதார்த்தம் ஆண்டி சித்பதார்த்தம், நீரே

உம்மைஅறிவிலாச் சடமாகவும்,எதிரியைச் சித்தாகவும் சொல்லாமற் சொன்னவராகின்றீர். சும்மாகிடந்த உம்மை எதிரி எழுப்பிவிட்டதாகக் கருதிய உமதுகருத்து நோக்கி உவமான உவமேயப்பொருத்தங்காட்டிவரைந்தாம். நிற்க.

சிலகாலத்துக்குமுன் வைசியமித்திரனில் பிரசுரிக்கும்படி பத்திராதிபருக்கு ஒருவியாசம் அனுப்பியது நீர்தாமன்றோ? அந்த வியாசமும் இப்பொழுது லோகோபகாரியில் நீர் எழுதியவியாசமும் விஷயம் ஒத்திருத்தலால்,வைசியமித்திரனில்அதுபிரசுரிக்கப்பெறுத விரோதநோக்கி,அதனையே லோகோபகாரியில் நீரேஎழுதினவராக ஊகிக்கப்படுகின்றீர். அது வாஸ்தவமானால்,அதில் உமதுபெயர்வைசியசிகாமணிஎன்று எழுதினீரே; அது எதற்காக? நயங்கருதாமலா எழுதவீர்? அப்பெயரை வைசியமித்திரன் இனம்பற்றி அபிமானிக்கவும் இப்பொழுது காஞ்சிவாசி யென்றபேரை லோகோபகாரி சென்னையின்கண்ண தாதலால் தேசம்பற்றி அபிமானிக்கவுங் கருதியேகொண்டீர்போலும். நல்லது சிகாமணியென்று நீரே முடிசூட்டிக் கொண்டீரே? அது நிமிஷமேனும் நிலைத்து வெளிப்பட்டதா? அதுநிலைத்து வெளிப்படுமவ்வளவுங்கூடப் பொறுக்காது வைசியமித்திரனுக்கு மீட்டும் மதிப்பின்றிலெட்டர் எழுதினமையினாலன்றோ? அம்மித்திரனல் எழுந்து மூலமாய்க் குட்டுப்பட்டீர். முட்டியபின் குனிவாரை ஒருவாறுயொதுக்குவருலகர். உம்மைநோக்கின் அவர்சிலாக்கியரே,

முட்டியபின்பாவது குனிந்தாரன்றே? நீரோ குட்டுப்பட்டும் பின்னும் அடங்காமல் சென்னை லோகோபகாரியைச்சார்ந்து கிளம்பினீர். இனத்தைஇனம் அறியும். நீர் உள்ளபடி வைசியராயிருந்தால் வைசியமித்திரமே செய்கின்ற பத்திரிகை, உம்மைத் தூரத்தேதள்ளி நீர்வைசியரன்று என்பதைவெளியாக்குமா? இத்தனை சங்கடங்கள் வருமென்று தெரிந்தால் வைசிய சிகாமணியென்று வேற்றுப்பேர்காட்டி வைசியர்க்கெல்லாம் சிகாமணியென்று நீரே பட்டங்கட்டிக்கொள்ளீர். வைசியோத்தமர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் அபிமானம் பெறக்கருதினீர்போலும். அப்படியாகில்வைசியப்பிரியன் வைசிய நண்பன் என்பனவாதியிலோர் பேரெழுதினுல் அவர்கள் அபிமானப்பிராப்தி ஒருவாறுபெறலாம். அப்படியன்றிச் சிகாமணியென்று எழுதினீரே. அது அபிமானந்தந்ததா? அவமானந்தந்ததா? வைசியசிகாமணிப்பேர் வாஞ்சித்த நீர் அதுகிட்டா தொழிந்தமையின், மனவருத்தமுற்றுப் பின்கொண்டு வெளிவந்தபேரும் இருபொருட்கிடனாய்நின்று பரிபவம் விளைப்பதையறியாதிருமாந்தீர். காஞ்சிவாசியென்னுந் தொடர்மொழிகளுள் வருமொழிப் பொருளாகிய வசிப்பவன் சான்றோரினத்தனுகில், நிலைமொழியாகிய காஞ்சியென்னுஞ்சொல் இயற்சொல்லாயே நின்று உத்தமோத்தமமாகிய க்ஷேத்திரத்தையுணர்த்தும். வசிப்பவன் மான்றோரினத்தனுகில், சாஞ்சித்திரிசொல்லாய் பேதகலையையுணர்த்

தும். மேகலைக்குள்ளே மனம்வசித்தாலும் காஞ்சிவாசியென்னத்தடையில்லை. நீர்கொண்டகருத்து க்ஷேத்திரமாகவே இருக்கட்டும்; ஆனாலும் வேறுமோராபாசப் பொருள்பயக்கத்தக்கபேர் தரிப்பானேனென்றதேநம்கருத்து.

வரம்புகடந்து எழுதியிருக்கின்றாரென்று எழுதினீரே, நடுநிலைநிற்போர் எடுத்துக்கொண்ட விஷயமல்லாமல் உம்மைப்போல அநாவசியமாக யாதேனும் எழுதினரா? ஒவ்வொன்றும் பிரமாணங்காட்டி நியாயபூர்வமாக எழுதியிருக்க, அதை வரம்புகடந்து எழுதினதாக எழுதிய நீர், உள் மதக்கலகமூட்டுங் கருத்துடைய சிலரென்றும், சும்மாகிடந்த சங்கை ஊதிக்கொடுத்தானாண்டி என்றும், சிவலோகத்திலிருந்து சீட்டுப்பெற்று வந்தார்போன்று என்றும், வேதாந்திகள்மனம் புண்படஎன்றும், இன்னோரன்னபற்பல அநாவசியங்கள் எழுதினீரே. இவைகள் வரம்புகடவாத நியாயபந்தியிலுள்ளனவென்றுவெண்ணினீர்? "இவையெல்லாமடிகளுக்கேயேற்குமென்றான்"என்றபடி இத்தகையவரம்புகடந்த அநாவசியங்கள் உமக்கேஏற்றன. எம்மதமும் பொய்யென்று தம்மதமே,பேசும் உமக்கு உள்மதமேது? வெளிமதமேது? இனிச் சிவலோகத்திலிருந்து சீட்டுப்பெற்று வந்தார்போன்று என்று எழுதினீரே. செனனமரணம், பந்தமோக்ஷம், சுவர்க்கநரகம், சுகதுக்கம், லாபநஷ்டம், முதலிய எல்லாமும், ககனாரவிந்தம், சசசிருங்கம், கூர்மரோம முதலியன போலப் பொய்யேயென்

று கொண்டு,உம்போல் வார்க்கும் இப்பொய்யே போதித்து, அப்போதனையும் பொய்; நீரும்பொய் அவரும் பொய்யாம் வரிசையில், வெறும்பொய்யே யாகுமுமக்குச் சிவலோகமிந் தச் சமயமெய்யாகிய தென்னையோ? அங்குச் சீட்டுப்பெறு வதானாற்பரமசிவ சகள மூர்த்தியிடத்தன்றோ பெறவேண் டும். நீர் அச்சகளமெல்லாம் (மாயிகம்) பொய்யென்றே போ ராடும் புண்ணியவானன்றோ? வேதாந்திகள் மனம்புண்பட என்றெழுதினீரே; வேதாந்திகளென்பார்,சீவன் ஈசுவரன் செ கம் எல்லாம் பொய்யே, பிரமமொன்றே மெய், அப்பிரமம் நாமே யெனக்கொண்டவரென்பதன்றோ? உமது கொள்கை. அப்படி யானால் வேதாந்திகளென்ற பலர்யார்? அவர்கட்கு மனமேது? புண்ணேது? விரிப்பிற் பெருகும். நீர் அனுவசி யமாக வரம்புகடந்தெழுதிய இவை யெல்லாம், சங்கராசாரி யர் நீலகண்ட சிவாசாரியரைக்கொல்ல ஏவிவிட்ட நரசிங்கம், சமீபித்த அளவிலே பரிபவப் பட்டு மீண்டு சங்கராசாரியரி டமே புக்கது போல, உமது பக்கமே திரும்பினமைதெளிக. இனி நீர்,ஒன்றிரண்டு என்று இலக்கமிட்டெழுதினீரே. அவ ற்றையும் விசாரித்து அவ்வாறே திருப்புகின்றோம்.

நீர், வீண்விவகாரங்களிலே செல்லவிடும் புத்தியைச்சற் றே திருப்பிச் சித்தசமாதானத்தோடு உற்றுக்கேட்குதிர். யா ராயினும் ஒருவாதியை மறுக்கப்புகுந்தால் அவ்வாதியெழுதிய விஷயங்கள் ஒவ்வொன்றும் எடுத்துக்காட்டி அதற்குத்தக்க

பிரமாணத்துடன் மறுப்ப தன்றோ புத்திமான்களுக் கழகு? நடுநிலை நிற்போர் எழுதிய விஷயத்தை மறுக்கப்புகுந்த நீர் முதலாவது குறிப்பில் (ஒரு மதத்தின் பேர் தெய்வசம்பந்த முடையதாகவேண்டுமென்றபிப் பிராயப்படுகின்றார்) என்று மாத்திரங்காட்டி (நியாயமதமுதலியன தெய்வசம்பந்தப்பெ யரா யிராமையை நண்பரறிந்திலர் போலும்) என்று எழுதி னீரே. நடுநிலைநிற் போர் எழுதிய முழுதும் எடுத்துக்காட்டி ஞல் உமக்கேயிடராய் முடியுமென்று தானன்றோ நீர் எடுத் துக்காட்டாது மறைத்தது? இது சூரியனை உள்ளங்கையால் ம றைத்தாற்போல்வதன்றி வேருகுமா? நடுநிலைநிற்போர் எழுதி யவிஷயங்கள் ஒவ்வொன்றும் சவிஸ்தாரமாக வைசியமித்திர னிலிருந்து பிரகாசிப்பதை யாவரறியாதார்? வைசியமித்திர னைப் பாராத சிலரிருந்தால் அவர்களாவது உமக்குச் சபாசு பட்டங் கொடுப்பார்களென்று கருதினீர்போலும். சிகாமணி ப்பட்டம்போல நீரே புனைந்துகொள்ளலாமே. வைசியமித்தி ரன் கூம் இலக்கப் பத்திரிகை பார்ப்பார்க்கு நுமது கோள் வெளியாகும். பட்டம் ஆடிக்கற்றிற் பட்டமாவது திண்ண மே. நீர் தெய்வசம்பந்த முடையதாக வேண்டு மென்று அ பிப்பிராயப்படுகின்றாரென்ற மையானும், நடுநிலை நிற்போர் தெய்வ சம்பந்தமான மதங்கள் எத்தனையோ எடுத்துக்காட்டி யிருக்கவும் அதற்குமாருக உமக்கு நேராக அப்பெயர்சம்பந் தமில்லாச் சிலவற்றை மட்டும் எழுதினமையாலும், உமக்கு

தெய்வ சம்பந்தம் வேப்பங்காயா மென்பது வெளியாயது.
உம் மிஷ்ட்டப்படி நீர் தெய்வ சம்பந்தமற்றவராயேயிரும்.
அதுபற்றி யாருக்கு நஷ்ட மென்பது விவேகிக ளுணர்வார்கள்.
"மன்னவர் வலிகளெல்லாந் தெய்வத்தின் வலிமுனில்லா";
என்றநீதி உமக்கு அநீதி போலும். அகம்பிரமம் (நானேதெ
ய்வம்) என்றே உருப்போடும் உமக்கு வேறு தெய்வ மிகை
யன்றோ? இதுபற்றியன்றோ? சைவசித்தாந்த மெய்கண்ட சந்
தானபரமாசாரியராகிய தாயுமானவர் "பன்முகச்சமயநெறிப
டைத்தவருந் தாங்களே கடவுளென்றிடும் பாதகத் தவரும்
வாததர்க்க மிடுபடிறரும்" என்ற வரிசையில் நடுவில் வைத்
துப் பாதகபட்டாபிஷேகம் நம்போலிகட்கேசெய்து வைத்
தனர். இந்தப்பட்டத்தைமாற்றிக்கொள்ள நினைக்கின்றீரோ?
சிகாமணிப்பட்டமானல் நினையீர் அதுதான்லபிக்கவில்லையே.
உங்கள்பரம்பரைக்கே பெரியரால்வந்தபட்டமன்றோ? லபித்
ததைமாற்ற நினைக்கலாமா? நினைத்தாலாவதுமன்று ஸ்ரீமாணி
க்கவாசகசுவாமிகள் சொன்னது எங்களுக்கல்லவென்று நீராக
வேயெழுதிமாற்றிக்கொண்டதாக நினைத்து மகிழ்கின்றீராத
லால் இதனை யருவருத்து மாற்றிக் கொள்ள நினைப்பினும்
நம்முன்னையோராலித்தனை காலமாக முடிந்ததுமன்று. நம்
மால்முடிவதுமன்று. நம்பின்னையோர்கதியுமதுவே அமைக.

இனி இரண்டாவது குறிப்பில், 'பிரமம். உலகத்துக்கு
முதற்காரணமென்றால், பிரமத்திற்கு நிர்விகாரத்துவம் அரு

வே ஒழிந்துவிடும் என்கிறார்' என்றுமட்டும் எழுதிப்'பிரமம் உலகத்துக்கு விவர்த்தோ பாதானகரணமாதலால் நிர்விகார த்துவம் அறவே யொழிதல் யாண்டையதாம்' என்றெழுதி னீரே. முதற் காரண நிமித்த காரண துணைக் காரணங்கள், உவமானங்கள், பிரமாணங்க ளெல்லாம் சவிஸ்தாரமாக நடு நிலை நிற்போர் காட்டியிருக்க, அவற்றையெல்லாம் நீர் எடுத் துக்காட்டாதொழிந்தீர்.

இருக்கட்டும், நீர் சொன்ன அம்மட்டிலேயே விசாரிப் பாம், முன் னெல்லாம்வாளா முதற் காரணமென் றெழுதிய நீர், இப்போது பிரமம் உலகிற்கு விவர்த்தமாகவே முதற்கா ரணமென் றெழுதினீர். அங்ஙன மெழுதியது, உலகம் பிர மத்தில் விவர்த்தமாகத் தோன்றுவ தன்றி எதார்த் தத்தில் இல்லை ஆதலால் நிர் விகாரத்துவம் ஒழிவதில்லை யென்றுகா ட்டக் கருதித்தானே. முழுப் பூசினிக்காயை உண்ணுஞ்சோ ற்றிலோர் கவளத்துள் மறைக்கின்ற சாமர்த்தியர் நீரேயன் றோ? நிற்க. நீர் சொல்லும் விவர்த்தத்துக்கு நீர் காட்டும் உ வமானம் சுத்திகார சிதம் (கிளிஞ்சில் வெள்ளி) தாணு புரு ஷன் (கட்டையிற் கள்ளன்) ரஜ்ஜுசர்ப்பம் (பழுதையிற்பா ம்பு) முதலியன வன்றோ? இவற்றைக் கண்டா னொருவன், முறையே வெள்ளியென்றும் கள்ளனென்றும் பாம்பென்று ம் மயங்கிக் கூறினனன்றிக் கிளிஞ்சி வெள்ளி யாகாது. கட் டை கள்ளனாகாது. பழுதை பாம்பாகாது. அவ்வாறே பிரமம்

உலக மாகாது. அதனால் அஃது முதற்காரணமானதில்லை, அதனால் பிர்மத்தின் நிர்விகாரத்துவம் ஒழிந்ததில்லை. என்றுதானே அவ்வுவமானத்தால் விளக்குகின்றீர். நல்லது நீர் இவ்வாறே நிச்சயங் கண்டு தெளிந்தவ ரன்றோ? நும் கருத்தின்படி வாஸ்தவத்தில் பிரமத்துக்கில்லாத முதற்காரணத்துவத்தை உண்டென்று கூறுவானேன்? நீர் உண்டென்றது நோக்கி அப்பிரமத்துக் குரிய நிர்விகாரத்துவம் அறவே யொழிந்துவிடு மென்று நடு நிலை நிற்போருண்மை சொன்ன பின்பு, அம் முதற் காரணத்துவம் எதார்த்தமல்ல விவர்த்தமாக உண்டென்று மாத்திரம் எழுதி, அதன் விவரணம் விளக்காதொழிவானேன்? நல்லது நீர் காட்டும் உவமைகளும் பழுதே. கிளிஞ்சில் கட்டை பழுதைகளில் ஒன்றில் ஒன்றே தோன்றும். அதுவும் உருவமொத்ததே. பிரமம் உருவுள்ளதா. ஓரேபொருள் அதில் தோன்றுவதா? நீர் கூறும் உலகம் உரு ஒவ்வாதது கோடாகோடி பேதரூபத்தது. அந்தோ, இத்தனையாசைப்பட்டு, வெகுபிரயாசைப்பட்டு, எப்படியாவது முதற்காரணத்துவத்தைப் பிரமத்தின்றலையிலேற்ற நினைத்து, உமது ஏகவாதத்தை அனேகவாதமாக்கினீரே. "ஊதக்கத் தொடங்கி மேலுங்கிழித்துவிட்டான்" என்ற கதைக்கே இலக்கானீரே. இன்னுமேன் சாதிக்கிறீர்? பிடித்தபிடி பழுதானால் விட்டுவிடுவதே புத்திமான்களியல்பு. பிடித்தோமே, விடலாமா என்று சாதித்தால் அப்பிடி, தோமாகவே (குற்றமாகவே) முடியுமென்பதை நாளடைவிலாவது கித்துணர்திர்.

பிரமமொன்றே நித்தியம்; மற்றெல்லா மித்தையென்று வாயில்வந்ததே கூறுகின்ற ஏகவாதியன்றோ நீர்? அதை அடியோடு மறந்து, பிடித்ததே சாதிக்குங் குணத்தால், உவமானங்களாகக் கிளிஞ்சிலென்றும் கட்டையென்றும் பழுதையென்றும் இன்னும் பல பொருள்களுந் தேடியெடுத்தீர். இவற்றின் உண்மையுணராது வெள்ளி முதலியனவாக மயங்கினனொருபுருடனுவனென்றுங் கூறுகின்றீர். நான் மயங்காதவனென்கிற நீரொருவருமிருக்கின்றீர், இத்தனை கொள்ளையில், உமது ஏகவாதம் அடியோடு தொலைந்து, அநேகவாதபானத்தையின்னுமா சண்டிலீர்? வீண்சாதனை சாதிப்பதுமுறையன்று. விடும் விடும். ஆனல், இத்தனையும் விவகாரத்தன்றிப் பரமார்த்தத்தி லில்லையென்பீரோ? நன்று நன்று. இரண்டாவதொன்றுமின்றித் தன்னந் தனியாய், நிர்விகாரமாய், விவகாரலேசமு மில்லாத தாய், அதீதமாய்ப், பரமார்த்தமா யுள்ள பிரமமென்னு மோரேபொருள் தானே உமது கொள்கைப்படியென்றுமுள்ளது. விவகாரமுளைத்ததெங்கே? இருவர் மூவர் இருந்தாலன்றோ; ஒருக்கால் விவகாரம் வரினும் வரும். ஒரே புருஷன் தானாக விவகாரஞ் செய்துகொள்வ துண்டோ? அன்று. விவகாரம், சீவர்களுக்கே என்பீரேல், முன்சொன்னபடி ஏகவாதப் பிடியை அடியோடுதொலையவிடும். இத்தனை பிரயாசையேன்? நீர் சிரமேற் கொண்ட கைவல்லியம், "எக்குணங்களும் பற்றுதோ னிமித்தகாரணனு மீசன்" என்றதை

உள்ளபடி நம்பும். கரும்புதின்னக் கூலியா? நீர் உமது சொந்தமெனக்கொண்டதன்றே கைவல்லியம். அது பிரமத்துக்கு நிமித்தகாரணத்துவம் சொல்லியிருக்க, நீரேன்முதற்காரணமென்றுகூத்தாடுகின்றீர், பொய்க்கூத்து வேண்டாம். நீர்மேற்கொண்டு நம்கருத்துக்கேயியைந்தன வென்று நீரேமகிழ்கின்ற, கைவல்லியம், வாசிட்டம், பகவத்கீதை, பிரமகீதைமுதலிய நூலெல்லாம், பதிபசுபாச, அநாதி நித்தியங் கூறுஞ் சைவசாஸ்திரச் சார்புநூலென்றே திண்ணமாக நினைக. அவற்றின் பொருள்களை, இடநோக்கிப்பூர்வாபரவிரோதம் வாராது பாதுகாத்து, உண்மை நோக்கி யூகித்துப் பார்க்குக.

அங்ஙனம் பார்ப்பீரேல் மேற்கூறிய உண்மைவிளங்கும். அப்படியும் உமது புத்திக்கு எட்டிலதேல், திரிபதார்த்த நித்தியக் ஞானம் வல்லார்வாய்க் கேட்டேனுந்தெளிக. "ஒன்றுகிடக்க ஒன்றை ஓதிவைத்தான் வாத்தி" என்றபடி, யுண்மையுணராத சாமானியரிடங் கேளாதீர். கேட்டால் மேலும் விபரீதமே விளையும். அது நிச்சயமென்பதை, உமது வாசிட்டத்திலே "அற்ப அறிவினர்க்கிந்த வரியபெய்ந்நூ, லீனமுறுமடமை தருமிது போன் மற்றை யெந்தநூல்களு மடமையிபற்றுதன்றே" என்ற உறுதியை யினியாவது கடைப்பிடியாகக் கொள்க. என்னை விரோதியாகக் கொண்டு அதனால் இவ் விஷயங்களையும் விரோதமாக நினையற்க. "ஊகமுளதேற் சிறுவருரையுங் கொள்க வொழிந்த தயனுரை யெனினுந் திர

ணமோப்ப வேகவிடுவாய்'' என்றதும் வாசிட்டமன்றோ? இத னையாவது விரோதித்துணரா தூகித்துணர்க. அந்தோ நீர் வி ணே விபரீதங் கொண்டு அதோகதிப் புகுவானேன், என்ற பரிதாபத்தா லெழுதினேம்.

இனி இவ்விரண்டாவது குறிப்பினிறுதியில், 'பிரமமாகி யஎன்னிடத்து, ஜீவத்தன்மையும், ஈசுரத்தன்மையும், கற்பிக் கப் பட்டிருக்கின்றன, வாஸ்தவத்தி லொன்றுமில்லை என்று சரஸ்வதி ரகசியோபநிஷத் கூறுவதை நண்பர் கவனிப்பாரா க'' என்று எழுதினீரே. இது நுனிக்கொம்பிலிருந்துகொண்டு அடிக்கொம்பை வெட்டும் புத்திசாலியின் கதிபோல்வதன்றி வேறில்லையென்பதைப் பின்வரும் விஷயத்தைக் கொண்டு நீ ரே கவனிக்க. சொல்லும் வாயில்லாத நினைக்கு மனமில்லாத நிஷ்களமாகிய பிரமம், முன், இருக்கின்றனவென்றும், அந்த நிமிஷத்துள்ளே அடுத்த வசனம் இல்லை யென்றும், முன்பி ன் மாறுபடக்கூறியதென்றது விவேகிகளால் ஊகிக்கத்தக்க தே. கற்பிக்கப்பட்டபின்னன்றி, அதற்கு முன்னில்லை என்பி ரேல், முன்னில்லாதன, பின் கற்பிக்கப் படுவானேன்? அக்கற் பனையாலுள்ள பயன் யாது? அப்பயன் தனக்கா? பிறர்க்கா? தனக்கெனில் ஒரு குறைவுமில்லாத பிர்மம், ஒரு பயனைத்த னக்கென வேண்டில் பிரமத்துவ ஹீனம் வருமே; பிறர்க்கெ னில், உம்மதத்தில் பிரமமொன்றேழிய வேறுபொருள் யாது மில்லையே. ஆகலால், பயன் நிஷ்பயனென்றன்றோ ஆகிறது.

பிரமம் பயனற்ற காரியம் செய்யுமா? அது விளையாட்டென் பீரேல், ஆவன தவிர்வன, அவசியம் அனவசிம், லாபம் நஷ்டம், பயன் நிஷ்பயன், முதலிய நோக்கும் அறிவில்லாத பாலியர் செயலன்றோ அவ்விளையாட்டு? சர்வஞ்ஞதாதி அஷ்டமங்கள திவ்வியகுண சப்பத்தன்றோ பிரமத்துவ லெக்ஷணம்? விரிப்பானேன் நிற்க. கற்பிக்கப் பட்டிருக்கின்றன என்று நிகழ்கால வினைமுற்றாகக் கூறிய தாற்பரியத்தை, இலக்கணம் வல்லார் வாய்க்கேட்டுணர்க. "முக்காலத்தினு மொத்தியல் பொருளைச், செப்புவர் நிகழூங் காலத்தானே" என்ற சூத்திரப்படி திரிகாலத்துமுள்ள பொருளையே நிகழ்காலத்தாற் கூறுவதென்க. ஜீவன், ஈசுரன், என்று மாத்திரஞ் சொன்னால், அவ்விருவரும் உள்பொருளெனக்கொண்டு, அநேகவாதமேற்சென்று, உம் ஏகவாதத்தைக் கீழேதள்ளித் தலையெடுக்க விடாமல், மேலேறி நிற்குமே என்று பயந்து, ஏகவாதத்தைப் பாதுகாக்கக் கருதி, ஜீவத்தன்மை ஈசுரத்தன்மை யென்றுகூறி, அப்பன் குதிர்க்குள்ளே இல்லை யென்னு மதுபோல, இருக்கின்றனஎன்ற நிகழ்கால வினைமுற்றால், உள் பொருளே யென்றுவிளக்கியது பெருவியப்பே. ஒப்புயர்வில்லாத, பெருந்தன்மையுள்ள பிர்மம், தன்னிடத்தே ஜீவத்தன்மை கற்பித்துக் கோடற்கு என்ன தலைவிதியோ? கொண்டமையாலும், கொள்ளாமையாலும்வந்த, வருகின்ற லாப நஷ்ட மென்னையோ? விரிப்பானேன்.

பிரமமாகிய என்னிடத்து ஜீவத்தன்மையு மீசுரத்தன்மையுங்கற்பிக்கப் பட்டிருக்கின்றன என்றது, நும்கருத்தின்படி பிரமம்கூறியதன்றோ? அதனை அப்பிரமம் எதனிமித்தம் எந்த அவசரத்திற் கூறியது? அதைக் கேட்டவர் யாவர்? அவர்கள் ஜீவர்களா? வேறா? ஜீவர்களென்றால், கூறிய பிரமமொன்றும் கேட்ட ஜீவர்கள் பலருமென்றிருவகைப் பொருள்களாய் நித்தியங்களா மன்றோ? அங்ஙனமன்று பிரமப்பொருளொன்றே நித்தியம் ஜீவப்பொருள் கற்பிதமே (பொய்யே) என்பீராகில், பொய்க்குச் சொல்வதெப்படி? அப்பொய் கேட்பதெப்படி? வெறும் பொய்யிடத்து அப்பிரமங் கூறியதென்பது சிறுவர்க்கு நகையாமன்றோ? வேறென்பீராகில் அவ்வேறு யாது? பிரமத்துக்கும் ஜீவர்களுக்கும் வேறெதுவோ, அது சடமன்றோ? சடத்துக்கொன்றையொருவர் சொல்வதுண்டோ? உண்டானால் அது பயித்தியமன்றோ? இவ்விதமான ஊறுபடைகளாற் பயனின்று. நிற்க.

நாம் கூறியது உபநிஷத் தன்றோ? அதனை மறுப்பதெங்ஙனமென்பீரேல், உண்மை கூறுதும். உற்றுநோக்குதிர். உபநிஷதங்களோ பற்பல; அவை அதிகாரிபேதம்பற்றி ஒவ்வோர் காரணவகைகளால் அவ்வதிகாரிகளின் பக்குவங்கட்கியையக் கூறுவனவன்றிவேறில்லை. தேகேந்திரியாந்தக்கரணங்களில் ஒவ்வொன்றையேபிரமமெனக்கொண்டு நிற்பார்க்கு, அவற்றினானங் காட்டிக் கழற்றும் வழி, ஜீவ நிலைமை தே

ற்றி, அதையே பிரமமெனக் கூறி அப்பிரமந்தாமே என்று ணர்த்துவதுகொண்டு மயங்கார்கள் இப்போதம் இன்னாருக் கு இன்ன நிமித்தம் கூறப்பட்டதென்று முண்மையுணர்ந்த சான்றோரென்க. இந்தக்கிரமத்தில், தேகாதிகளையே நாம் நாம் என்று நின்ற ஜீவர்கள், அவை தம்மிற் கீழான கருவிகளே யென்று தெளிந்தவழி, அவற்றைக் கீழென்று தள்ளி, நாம் பிரமமன்றோவென்று முனைத்தெழுந்து, அவ்வசப்பட்டு நிற் றலின், மேல்நோக்குதலின்றி நாம் பிரமமென்றே ஊன்றி நி ற்பார்கள். இவர்களே பசுஞானிக ளெனப்படுவார். இதனை,

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பாசபை வைகரியா தித்திறங்கள் மேலா
நாதமுடி வானவெலாம் பாசஞான
நணுகியான் மாவினைகீழ் நாட லாலே
காதலினா னன்பிரம மென்னு ஞானங்
கருதுபசு ஞானமிவ னுடலிற் கட்டுண்
டோதியுணர்ந் தொன்றான்று யுணர்ந்திடலாற் பசுவா
மொன்றாகச் சிவனியல்பி லுணர்ந்திடுவன் காணே"

என்னும் பிரபல சுருதியானுங் காண்க. மேற்கூறியபடி நூல் களும் அவற்றைக் கூறுவோரும் கேட்போரின் பக்குவ நோ க்கித், தங்கள் அபிமதம் வேறாயிருக்கவும், அதனை வெளி யிடாது பக்குவத்துக்கியையவே காலோசிதமாகக் கூறுவது மியல்பே என்பதனை முன்னடந்த கதைகளிலும் வைத்துத் தெளிக.

அவையாவன, தேவகுருவாகிய வியாழபகவான், தம்மை யடுத்தார்க்குக் கூடாவொழுக்கங்களை நீக்கி வைதிக சைவநெறியி னிற்பித்துய்வித்தலே தமதுண்மையான அபிமதமாயிருக்கவும், இந்திரனுனவன், சூரபத்மனுலே நெடுங்காலமிடர்ப் பட்டுச் சுப்பிரமணியப் பெருமானுல் இடர்முற்று நீங்கப்பெற்று, முன்போலத் தன் அரசிருக்கையுற்று வாழுங்கால், முன்பட்ட கஷ்டநோக்கி, அம்மட்டிலேயே அவ்வாழ்வை வெறுத்துத் துறவடையக் கருதுவது நோக்கி, இவன் இப்பொழுது கொள்ளக்கருதுந்துறவு, பிரபஞ்ச வெறுப்பு முதிர்ந்து வந்ததன்று, இவ்வுலகுக்கு அரசனிருக்கவேண்டியது மவசியம். ஆதலால் இச்சமயம் இவனுக்குக் காமநூற் போதனையே பொருத்தமென்று கருதி, அதுவேயுண்மை யென்றுபதேசித்து, அவன் துறவை மாற்றிப் பிரபஞ்ச வழிப்படுத்தினுர். இதனை,

"போன துன்பினுக்கஞ்சியே புகுந்தவித் திருவை
யூன மாமெனத் துறந்துநீ தமியைநோற் றுழலி
னுன போதுறுந் துயரினுக் கவதியு முண்டோ
கான னீந்திட வெருவியே கடல்புக வற்றே."

"ஆக நோவுற வருத்தியே யைம்புல னவித்து
மோக மாதியா மூவிரு குற்றமு முருக்கி
யோகு செய்திடு மேலையோர் பெறுபய னுனைக்கிற்
போகமன்றியொன் றில்லைகா ணொல்லைநீர் புகழோய்"

"காண்ட கும்புல னுடுங்குமாங் காணமு மிலையாம்
பூண்ட செய்கையு மொழியுமா மியாக்கையும் போமா
மாண்டொர் பேரின்ப முண்டென்ப ரதனையா ரறிந்தா
ரீண்டு கண்டதே மெய்யென்ப ருலகுளோர் யாரும்.

பொய்ம்மை யுற்றிடு கானலைப் புனலென விரும்பிக்
கைம்மி சைக்கொண்ட வமிர்தினைக் கமருகுத் தாங்கு
மெய்ம்மை யிற்சில ருண்டெனும் வீடுபே றுன்னி
யிம்மையிற்பய னிழக்குதி நன்றுநின் னெண்ணம்.

மங்கை மாரிடத் தின்பமே யின்பமற் றவரோ
டிங்கு வாழ்வுறும் வாழ்க்கையே யியல்புறும் வாழ்க்கை
யங்க வர்ப்பெறு செல்வமே செல்வமாங் கவர்தங்
கொங்கைபுல்குறு வறுமையே கொடியதோர் வறுமை."

என்பனவாதியாற் காண்க. இதுபற்றி, இக்காமநூல் தேவகுரு வாக்கியமன்றோவென்று சான்றோர் மேற்கொண்டொழுகுவதுண்டோ?

வேதசிவாகமாதி சிவசாஸ்திர பாரங்கத சிவபக்த சிகாமணியாகிய காசிப மகரிஷியானவர், தமது புத்திரர்களாகிய சூரபத்மாதிகளுக்குச் சிவசாஸ்திரத் தெளிவாகிய பதி பசு பாச திரிபதார்த்த நித்திய லக்ஷணங்களும், அவர்கள் மேற்கொண்டொழுக வேண்டிய மார்க்கம் உத்தமோத்தம சைவமார்க்கமே யென்பதும் உபதேசித்துவருங்கால், தன்

பிதாவின் வேண்டுகோட்கிணங்கினவளாகிய மாயாதேவி, அப்புத்திரர்களால், தேவர்களிடருற்றுச் சிவத்துரோகத்தினின்றும், நீங்கவேண்டிய சிவ நியமத்துக்கு இசையவே அப்புத்திரர்களை அவ்வுபதேச வழியாகிய சன்மார்க்கத்தினின்றும் நீக்கி, தான் சொல்வதே நன்மார்க்கமென்றுகொள்ளும்படி உபதேசித்தாள். இதனை,

"பிறந்தநல் லுயிர்க்கெலாம் பெருமை நல்கிய
விறந்ததோர் பொருண்மைய திரண்டின் வன்மையு
மறிந்தவர் தெரிவரே லரிய கல்வியிற்
சிறந்தது திருவெனச் செப்ப லாகுமால்.

சொற்றரு கலையெலாந் தொடர்ந்து பற்பகல்
கற்றவ ராயினுங் கழிநி ரப்பினு
லற்றவ ராவரே லாக்கம் வேண்டியே
பற்றலர் தம்மையும் பணிந்து நிற்பரால்.

நூலுறு கல்வியை நுனித்து நாடியே
வாலறி வெய்திய வரத்தி னோர்களும்
மேலுறு திருவொடு மேவு றாரெனின்
ஞாலமுங் கவர்தமை நவையுள் வைக்குமால்."

என்பன வாதியாற்காண்க. இவ்வாறுமாயாதேவி காலோசிதமான போதனைசெய்ய அவ்வாறே அசுரர்பன்மாதியர் வி[illegible]யாகஞ்செய்து அளவில்லாத ஐஸ்வரியாதிகளைப்பெற்

று பின்னும், காசிபரிடம் வந்து வணங்கித் தாங்கள் இனிச் செ ய்யவேண்டிய தென்னென நன்மதியுடன் கேட்கவும், பின் ந டக்கவேண்டிய சிவாஞ்ஞையைத் தெரிந்தவராதலால், அவ ர்கள் தேவர்கட்கிடர் செய்தற்குரிய குரூரகுணத்தைப் பெ றக்கருதி, அப்பாதக வழியைத்தான் கூறினும் பாதகமென் றெண்ணியோ? யாது கருதியோ? "உங்களுக்காசிரியராகிய சு க்கிராசாரியரைக் கேட்டு, அவ்வழிமேற் கொண்டொழுகுங்க ள்" என்று ஆஞ்ஞாபித்தார். அதன்மேல் அவரை அடைந்து வணங்கிய அவர்கட்கு அச்சுக்கிராசாரியர் போதித்ததைப் பாரும். அது நம்கருத்துக்கியைந்ததாதலாற் சிறிதுநேரம் மகிழ்ச்சிகூரும்.

அதன்மேலாவதுண்மைநோக்கி ஊன்றிநின்று நேரும், விரோதபுத்தியைத்தீரும்.

"பாச மென்றும் பசுவென்று மேதரு
மீச னென்று மிசைப்பர் தலையெனப்
பேசன் மித்தை பிறிதிலை யாவியுந்
தேசு மேவு சிவனுமொன் றாகுமே.

ஆதி யந்தமின் றாகி யமலமாஞ்
சோதி யாயமர் தொல்சிவ னுடலின்
காத லாகிக் கருதுதன் மாயையாற்
பூதம் யாவும் பிறவும் புரிவனால்"

"இத்தி றந்தினெஞ் ஞான்றுமவ் வெல்லைநீர்
நித்த னூட னிலைமை புரிந்திடு
மித்தை யாகும் வினைகளும் யாவையு
முத்தி தானு முபல்வது மன்னதே.

தஞ்ச மாகுந் தருமநன் றுமெலன
நெஞ்ச கத்து நினைந்து புரிவதும்
விஞ்சு கின்ற வியன்பவந் தீமெதன
வஞ்சு கின்றது மாமறி வின்மையே.

தருமஞ் செய்க தவறுள பாவமாங்
கருமஞ் செய்பற்க வென்பர் கருத்திலா
ரிருமை தன்னையும் யாவர்செய் தாலுமேல்
வருவ தொன்றிலை மாயம்வித் தாகுமோ.

உண்மை யேயிவை யோதியி னுருளார்
நுண்மை யாமினி நுங்களுக் காகிய
வண்மை யுங்கொல் வழக்கமு மற்றவுந்
திண்மை யோடுரை செய்திடக் கேட்டிநீ.

தேவர் தம்மினுஞ் சீதர னதியோ
ரேவர் தம்மினு மேற்றம தாகிய
கோவி யற்கையுங் கொற்றமு மாணையு
மோவில் செல்வமு முன்னிடை யுற்றவே"

"உற்றதோர் மேன்மை நாடி யுன்னை நீ பிரம மென்றே
தெற்றெனத்தெளிதி மற்றத்திசைமுகன் முதலோர்தம்மைப்
பற்றலை மேலோ ரென்று பணியலை யிமையோ ருங்கள்
செற்றல ரவரை வல்லே செறுத்தி திருவுஞ் சிந்தி.

இந்திரனென்போன்வானோர்க் கிறையவனவனே னென்ன
லந்தமிலவுணர்தங்க ளாருயிர் கொண்டானன்று
னுய்ந்தனன்போகாவண்ண மொல்லையிலவனைப் பற்றி
மைந்துறுநிகளஞ் சேர்த்தி வன்சிறைபுரிதிமாதோ.

சிறையினையிழைத்துச்செய்யுந் தீயனபலவுஞ் செய்தி
மறைபுகன்முனிவர்தம்மை வானவர் தம்மைத்திக்கி
னிறையவர்தம்மைநாளு மேவல்கொண் டிடுதியன்று
ருறைதருபதங்களெல்லா முதவுதி யவுணர்க்கம்மா.

கொலையொடுகளவுகாமங் குறித்திடு வஞ்சமெல்லா
நிலையெனப்புரிதியற்று னினக்குமேல் வருந்திதொன்று
மிலையவைசெய்திடாயே லிறைவநீ விரும்பிற்றெல்லா
முலகிடை யொருங்கு நண்ணு வுனக்கெவர் வெருவு நீரார்"

என்று இவ்வாறு சுக்கிராசாரியர் புண்ணியபாவம்,சுகதுக்கம், சுவர்க்கநரகம், பந்தமோக்ஷம், செக, சீவ, பரங்கள் எல்லாமித்தையே;பிரமமே நித்தியம்,அது நாமே,என்றுபோதித்தாற்றான் சூரபன்மனாதியோர் குரூர கிருத்தியோன்முகர்

களாய்த் தேவர்களுக்கிடர் செய்வார்களென்றுபதேசிப்ப அதையே யுண்மையாக மேற்கொண்டு தேவர் முனிவர் முதலிய சாதுக்கள் யாவர்க்கு மிடரேசெய்து கொடுங்கோன்மை செலுத்தியது பிரசித்தமே.

யுத்த பூமியிற் சென்ற அருச்சுனன், கொலையால் வருவது வேறெவற்றினும் பெரும்பாதகமே. அதனினும், பிராமணர் குரவர் முதலியரைக் கொல்லுதல் மிகப் பெரும் பாதகமே யென்றுள்ளபடி துணிந்து வில்லையுங் கைவிட்டு, எதிரிகள் என்னைக்கொல்லினுங் கொல்லுக, நான் அவரைக் கொல்லேனென்று நிற்ப, அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான், அவன் கருத்துக் குடன்பாடுடையராயினும், அந்தச் சமயம் நிகழவேண்டிய ஆவசியக நோக்கிக் காலோசிதமாக அவனுக்கு இதம்பேசித் தன்முகப்படுத்தி, கொலை செய்தானொருவனென்றும் செய்யப்பட்டானொருவனென்று மிருபொருளில்லை; என்றும் ஒரு பொருளே உள்ளது, அப்பொருள் எப்பொழுதுங்கொலைப்படாது. கொலைப்படுவதுடம்பேயன்றி வேறில்லை. அவ்வுடம்போ என்றும் அழிபொருளே. அழிபொருளையழிப்பது பெரும்பாதகமென நீ கொண்டது அறியாமையே, அறிவாளியாகிய உன்னிடத்திந்த அறியாமை புகுந்ததென்னை? அன்றியும் இராஜதர்மம் எதிரிகளைக்கொல்ல விதித்துள்ளதே, என்பனவாதிகளை அதிவிஸ்தாரமாய் அத்தியாயங்களாய் விரித்துபதேசித்தனர். அதுவும், கொலை

யால் வருவது பெரும்பாதகமே யென்றுண்மை துணிந்து அவன் கருத்தைச் சுருக்க வசனத்தால் திருப்புவது முடியாதென்று கருதியே போலும்.

இவ்வுபதேசத்தினிடை அக்கண்ணபிரான் தமது வியாபக வெல்லையாகிய பிரகிருதித்தத்துவாந்த புவனப்பொருள்களெல்லாம்தன்னிடைத்தோன்றுவதோர்விசுவரூபங்காட்டி அப்போது சிவோகம் பாவனையுற்று நின்றாராதலால், எல்லாப் பொருளும் நானே,என்னையன்றி யொன்றில்லை,என்னையே பூஜிப்பாய்,என்னையேதியானிப்பாய், எனக்கே தொண்டு செய்வாய் என்றுஞ்ஞாபித்தனர்,இவரோ அசத்தியங்கூறாத சத்தியவாசக உத்தமகுரு, அவனோ குருவாக்கிய லங்கனஞ் செய்யாத உத்தம சிஷியன். அவன் அவராஞ்ஞையின்படி என்றுஞ்செய்து வந்தது சிவபூஜைத்திருத்தொண்டே. இதனால் இவன் நாம்பசுவாகிய அடிமை; சிவனொருவனே பதியாகிய ஆண்டான்.இதனைப் பசுபதிப் பெயருமன்றோ பரிஷ்காரமாக விளக்குகின்றது. ஆதலால் அச்சிவனையே மெய்யன்புடன் பூஜித்துப்பரிபாகமுற்று முத்தியுறுதலே ஆத்மலாபமென்றுள்ளபடி துணிந்தவனென்பது நன்குவிளங்கும்.

கண்ணபிரான் சிவோகம் பாவனையுற்று நின்றே யுபதேசித்தாரென்பது "கடையுகங் குறுகலுற்ற, வன்றுலகடையமாய்க்குமவனியானறிநீ யையா." என்ற பகவத்கீதையாலுந் தெளிக. "இறந்தார்களெனக்கருதிங்கிவரெல்லாமென்

ஞலே, யறந்தானு மதுநீயே யாங்கவரைக் கொன்ருயால்."
என்றுங் கூறினர். விரிப்பிற் பெருகும். அமைக. இவ்வகை
யாகச்சுக்கிராசாரியர்கண்ணபிரான் இருவருங்காலோசிதமாக
நடக்கவேண்டிய நிலைமை நோக்கிக் கொலையாதிகள் பாதக
மாகா தர்மமேயென்று கூறியதை யுண்மை யெனக்கொண்டு
அக்கொலையாதிகள் செய்வாரும் அதற்கு இந்நூல்களைப் பிர
மாணங்காட்டுவாரு முலகிலுண்டா? பெரியோராயினும் கா
லோசிதமாகத்தங்கருத்துக்கு மாறாகவுமுரைப்பாரென்பதை,

> "அருச்சுனர்க்கு மிராமர்க்கு மதிகார மவைநோ
> க்கி யறைந்த நூலின், கருத்தறியாய் ஞானமொன்றே
> பிரமாணஞ் சரியைபயது கணக்கன் ருகும், விருத்தமறு
> மாசார முடையோனே ஞானியில்லோன் விருத்தனா
> குந், திருத்தமுட னமைச்சவிது துணிவென்றே யுட்
> கொள்வாய் திர ஞகி."

என்று மகராசா துறவுநூலுந் தெரிவிக்கின்றது. இந்நூல்
நூன்னூலன்றோ? ஆகவே உபநிஷதங்களானு லென்ன வேறெ
வைகளானுலென்ன அங்கங்கே அவைகள் எதனிமித்தம் எ
ந்த அதிகாரிகளுக்குச் சொன்னதென்பதை நோக்கிப்பரியா
லோசித்தே அவ்வந்நூல்களின் எதார்த்தந்தெரியவேண்டுமெ
ன்பதை யினியேனுந்தெளிக.

இனி மூன்ருவது குறிப்பில் "கேவலம் மாயை உலகத்
திற்கு முதற்காரணமென்று கூறுவது சுருதிசம்மதமன்று"

என்று எழுதினீரேயன்றி இன்ன பாகத்தில் இன்ன வசன மென் றெழுதினீரல்லீர், அங்ஙனமெழுதாத நீர், பின்பு பிர பஞ்சத்திற்கு உபாதானகாரணம் பிரமத்தைத்தவிர வேறில் லையென்று யோக சிகோபநிஷத் கூறுவதாக எழுதியதென் னோ? இதுபோல அதற்கும் இன்ன பாகமென்றுவது எழுத லாமே! அப்படி எழுதுங்கையைத் தடுப்பாரில்லையே! வாக்கி யங்களைக் காட்டாமையால் அவற்றின் எதார்த்தத்தை முன் பின் நோக்கி விளக்குதற்கிடமில்லை. நிற்க.

உலகத்துக்கு முதற்காரணம் மாயையென்பது சுருதிசம் மதமன்றென்று நும் வாய்மொழியே சம்மதமாகப் பிறர்க்கு த்தெரிய நீர் எழுதிய வஞ்சனை போலன்றி,அவ்வஞ்சனைவெ ளியாகவும் உண்மை தெளிவாகவும் நீர் காட்டிய சுருதி சா ராத் சாரவாக்கியங்களை காட்டுகின்றும். வஞ்சபுத்தியைத் தூரத்தொதுக்கிவிட்டு நிஷ்களங்க புத்தியும் பத்தியுங்கொ ண்டு உற்றுப்பார்க்குக.

"உருவாதி சதுவிதமா யொன்றென் றெவ்வா
  வுண்மைபதாய் நித்தமா யொன்று யென்று
மருவாகிக் கன்மமா ரணுக்கள் யார்க்கு
  யாவார மாயசித்தா யசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியா மெல்லாம்
  விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுக்க

வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மரனருளான் மாயை தானே."

என்னுஞ் சுருதியை உற்றுப்பார்க்கும் யோக்கியதையுள்ள சிவதீக்ஷா சமஸ்கார சீலர்களிடங்கேட்டாவது உலகத்துக்கு முதற்காரணம் மாயையேயன்றி வேறில்லை என்னுமுண்மைதெளிக. இச்சுருதி ஸ்ரீமந் நடேசப்பெருமானும் புகழ்ந்துபாடப்பெற்ற ஸ்ரீமத் உமாபதிசிவ வாக்கென்பதை நன்குணர்ந்து பயபக்தியுடன் வழிபாடுசெய்து அதோகதியை விட்டுஉத்கதியிற்புகுக. இச்சுருதியில் முதலில் "உருவாதி சதுவிதமாய்" என்ற அவ்வளவிலேயே உலகத்திற்கு முதற்காரணம் மாயையே என்பதைத் தெளியக்காண்க. "உருவாதி சதுவிதம்" என்றது தனுவுங்கரணமும் புவனமும் போகமுந் தானன்றோ? இத்தொகுதி தானன்றோ உலகம்? இச்சுருதி முழுதும் மாயை இலக்கணங் கூறியதன்றோ? "உருவாதி சதுவிதமாய் மன்னியிடும்" என்றது அவற்றுளோரிலக்கணமன்றோ? அது மண் குடமாய் மன்னியிடுமென்பது போல்வதன்றோ? சடமாகிய குடத்துக்குச் சடமாகிய மண் முதற்காரண மாதல் போலச் சடமாகிய தநுகரண புவனபோக சதுவிதத்தொகுதியான உலகத்துக்குச் சடசத்தாகிய மாயையே முதற்காரண மென்பது சாமானியருக்கும் விளக்கமாகப் பசுமரத்தாணி போல அநாதியே நிலைபெற்றிருக்கவும் நீர் அது சுருதிசம்மதமன்றென்று கூறிய வாய்மதம்

பேய்மதமாய்ச் சாய்மதமாவதன்றி எய்மதமாகுமா? என்முகம் வாடுகின்றீர்? மனங்கோடுகின்றீர்? பொய்யோடு கூடுகின்றீர்? கோப நீடுகின்றீர்? நில்லும், நில்லும் (சேஷம் கோபேன பூரயேத்) என்பதை நாடுகின்றீரோ? விடும் விடும். கோபம் வேண்டாம். எய்தவனிருக்க அம்பை நோதலாமா? நும்மனோர் மயங்க உபசாரம் உண்மை இரண்டும் விரவி உண்மை யூகித்துக்கொள்ளவைத்த சுருதிபோலன்று. உண்மை ஒன்றையே கூறுகின்ற பிரபல சுருதி வாக்கியங்களே எடுத்துக் காட்டினுமன்றி, புதிது கூறினேமல்லேம். எம்மிடத்துமக்கேன் கோபம்? அதை க்ஷேமநிதியாக வைத்துக்கொள்ளக் கருத்துண்டேல், அச்சுருதியிடத்துக் கோபத்தைக்கூட்டும். மேலுமூட்டும். மனம்போனபோக்கிலே நின்றெழுதுங் கைவலிமையைக் காட்டும், கிடைத்தவளவு தீட்டும். வெளிவரும்படி நீட்டும். நல்லது உலகத்துக்கு முதற்காரணம், மாயை தானென்பதற்கு இச்சுருதியொன்றுதானா? இவ்வுமாபதிசிவ குருவின் குருவாகிய ஸ்ரீ அருணந்தி சிவகுருவின்சுருதியில்

"காரிய காரணங்கள் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணைநி மித்தந்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
வாரியன் குலால னய்நின் றாக்குவ னகில மெல்லாம்."

என்ற இச்சுருதியின் மெய்ப்பொருளை நீரே கூறுகிர். அதுவே நமக்குஞ் சம்மதம். இனி இவ்வருணந்தி சிவகுருவின்

குருவாகிய ஸ்ரீமெய்கண்ட சிவ குருவின் சுருதிஇரண்டாஞ் சூத்திரத்தையும், ஸ்ரீ சிவஞான முனிகள் வியாக்ஞானத்தையும் சிவதீக்ஷாதிசம்ஸ்காரம் பெற்றுக் குருமுகமாக உற்றுநோக்குதிர். அதற்குள் அவசரமானல் அவ்வித சம்ஸ்காரமுடையாரிடங்கேட்டேனுந் தெளிகுதிர். வடமொழியும் வல்லீரென்றெழுதுவித்துப் பட்டங்கட்டிக்கொள்ளுமாசை யுள்ளீராதலால் இவ்வடமொழிச் சுலோகங்களையு முற்றுப்பார்ப்பீராக.

“மாயாஸ்வரூபநிரூபணம்”

“[illegible] மாயா[illegible]ணேதி த்³விதீய: ஶ்லோக:।

தத³ேகமஶிவம் பீ³ஜம் ஜக³த: சித்ரஶக்திமத்

ஸஹகார்யதி⁴காராந்தஸம்ரோதி⁴ வ்யாப்யநஶ்வரம்॥

இதனுல், அந்த மாயையானது ஏகமாயும் நிமித்தகாரணமாகிய சிவமல்லாததாயும், ஜகத்திற்கு முதற்காரணமாயும், பலவேறு சக்திகளையுடையதாயும், ஸககாரிகளாகிய கர்மங்களினதிகாரமுள்ளவரை ஜீவர்களை மறைப்பதாயும், வியாபகமாயும், நாசமில்லாததாயுமுள்ள தென்பது தெளிவாயது. அம்மாயையே ஜகத்துக்கு முதற்காரணமென்பது விளக்குவானெடுத்துக்காட்டிய இச்சுருதியாலேயே “உடம்பொடு புணர்த்தல்” என்று முத்தியால் பதிபசுக்களின் நித்தியமும் தெளிவாயது. ஆகவே பதிபசு பாச திரிபதார்த்த நித்தியங் கூறியதுமாயிற்று.

[illegible]
[illegible]

இதனால், காரியரூபமாக ஜகங்காணப்படுகிற வதுவினாலே நிமித்தகாரணனாகிய கர்த்தா ஒருவனுண்டென்று எப்படி அனுமானத்தால் நிச்சயமாகிறதோ அதுபோல அந்த ஜகத்துக்கு உபாதானகாரணமும் உண்டென்பது நிச்சயமே. அது நூலின்றி வஸ்திரமாகாததன்மைபோல், என்பது தெளிவாயது, ஆகவே சித்தாகிய கர்த்தா பிரமமே நிமித்தகாரணம், சடமாகிய வஸ்திரத்துக்குச் சடமாகிய நூல்முதற்காரணம்போலச் சடமாகிய செகத்திற்குச் சடமாகிய மாயையே முதற்காரணமென்று நிச்சயமாயது.

[illegible]
[illegible]
[illegible]

இதனால், விகாரப்படாததாய் சித்தாயிருத்தலால் சிவமாவது சிற்சத்தியாவது சடமாகிய ஜகதுபாதானமாகாது. சித்துக்குவிகாரம் பொருந்தாது அசித்துக்கே விகாரஞ்சொல்லப்படுமாதலால் அசித்தாகிய மாயையே முதற்காரணமென்பது தெளிவாயது.

[illegible]
[illegible]

இதனால் சித்தாகிய பிரமத்தினின்றும் செகத்தாகிய காரியம் விவர்த்தமாகத் தோன்றிய தென்னில், அந்தக்காரியம் இல்பொருளாக வேண்டும். சர்வபிரமாணங்களாலும் உள்பொருளென்று சித்தமாயிருக்கிற செகத்தை சித்தின் விவர்த்தமாக எப்படிக்கொள்ளப்படும் என்பது தெளிவாயது.

[illegible]
[illegible]

இதனால் சிவனாகிய கர்த்தாவில் இந்தக்குண்டலினியாகிய சுத்தமாயை தாதான்மியமாயிராது. என்னை? "கடத்திற்கு உபாதானமாகிய மிருத்திகைகுலாலனிடத்திற் போல இந்த மாயையுஞ் செகதுபாதானமாயிருத்தலாலென்க" என்பது தெளிவாயது.

[illegible]

இதனால் சுத்தமாயை முதலிய மாயைகளாகிய உபாதானங்கள் ஏரர்களுக்குத் தேகேந்திரியாதிகளைச் செய்கின்றனவென்பது தெளிவாயது.

[illegible]
[illegible]

இதனால் பிரளயகாலத்தில் தேகலயமான கர்மிகளாகிய ஆன்மாக்களுக்குச் சிருட்டிகாலத்தில் ஸ்தூல சூக்ஷும

தேகாதிகளைக் கொடுக்கும் உபாதான காரணம் மாயையென்பது தெளிவாயது.

இனி, இம்மூன்ருவது குறிப்பினிறுதியில் "சகுணோபாசனைமாயிக மாயிருப்பதை நண்பரறியார்போலும். இவர்க்குச் சகுணோபாசனை வேப்ப நெய்யுண்பதுபோலும் நாமரூபமெல்லாம் மாயிகமாமென்ப துணர்ந்தவர்க்கு நண்பர் கூற்று நகைக்கே யிடமாம்' என்று எழுதினீரே. இதனால், ஊரார் சிரிக்க உறவோர் சிரிக்கப் பாரோர் சிரிக்கப் பண்டிதர் சிரிக்கத் தேரார் சிரிக்கத் தெளிந்தோர் சிரிக்க நீரே யிலக்கா நிற்றலைக் காண்க. நீர் சகுணோபாசனைமாயிகமா யிருப்பதை நண்பரறிந்திலர்போலும்" என்று கூறிய கூற்ருனே சகுணம் மாயாசம்பந்தமுள்ள தாதலால் நிற்குணத்திற்ருழ்ந்ததென்பதுதானே உமது கருத்து? அப்படியானுல் சகுணோபாசனை வேப்பநெய்போற் கசப்பது. நமக்கா? எமக்கா? இதனை எழுதும்போது நும்கருத்தை எங்கேவிட்டு நின்றீர். சகுணம் நிர்க்குண மிரண்டும் ஒன்றே. வேற்றுமையின்றெனக்கொண்டு இரண்டிலும் ஒரே புத்தியும் பத்தியுங் கொண்டொழுகும் எம்போலிகளுக்குச் சகுணோபாசனை வேப்பநெய்போல் வதுஎத்தேசத்திலே எவ்வூரிலே எக்குலத்திலே எக்குடியிலே எந்த யுகத்திலேனு முண்டாவென்றாற்றுப்பாரும். அப்படியன்று. நிர்க்குணோபாசனை யென்றெழுத வேண்டியதைக் கைதவறிச் சகுணோபாசனை யென்றெழுதிவிட்டோமென்

பீரேல், இரண்டிலும் ஒரே புத்திகொண்டுபாசிக்கின்ற எம்மவர்களுக்கு நிற்குணோபாசனையும் வேப்பநெய்போலக் கசப்பது திரிகாலத்துமில்லையென்பது தெற்றெனக்காண்க. உமது வேப்ப நெய்ப்பிரசங்கத்தால் உமக்கே ஒன்று பசு நெய்யும் ஒன்று வேப்பநெய்யும்போல்வதாயதும் உள்ளக்கிடக்கைதெள்ளத் தெளியதும் கள்ளந்தொலைந்து வெள்ளவெளியாயது. ஆகவே நிர்க்குணோபாசனையையே பசு நெய்போலப் பற்றி நிற்பதும், சகுணோபாசனையை வேப்ப நெய்போலவெறுத்துநிற்பதும்உமதுகருத்தேயன்றிவேறில்லை. இதனைச் "சகுணோபாசனை மாயிகமாயிருப்பதை" என்றும் "நாமரூபமெல்லாம் மாயிகமாம்" என்றும் நீர்கூறிய கூற்றே வலியுறுத்துமென்க.

ஆனால் நீர் நும்கருத்தின்படி நிர்க்குணோபாசனை ஒன்றையேபற்றிநிற்பதன்றோ நும்மனசுக்குவிரோதமில்லாத பொருத்தம்? அப்படியன்றி மனசுக்கு விரோதமாய் விபூதி ருத்திராக்ஷ வேடம் பூண்டு சிதம்பரநடேசாதி சகுணமூர்த்திகளை மிக உருக்கமுள்ளவர்போல வெளிக்காட்டித் தெரிசனஞ்செய்து வருவதெதற்கு? இது ஒப்புக்கா? உள்ளபடியா? உள்ளபடியென்பீரேல், மாயிகமென்றுநீர் கூறியதுநடேசாதி சகுண மூர்த்திகளை விலக்கிக்காட்டுமா? மாயாசம்பந்த சரீரம் சீவர்களுக்கன்றிச் சிவனுக்கில்லை; மாயை மூன்று. சீவர்களு மூன்றுவகையர்; அவருள் விஞ்ஞான கலர்க்குச் சுத்தமாயையு

யும், பிரளயாகலர்க்கு அசுத்த மாயையும், சகலர்க்குப் பிரகி ருதிமாயையும் சரீராதிகளா மென்றும், சிவனுக்கு அருளே திருமேனியா மென்றும் கூறுஞ் சிவசாஸ்திர த்துண்மைப் பொருளையுற்று நோக்குதற்குரிய அருகதையுள்ளார் வாய்க் கேட்டேனுந் தெளிக. இருக்கட்டும். நீவிர் வேறிடத்தில் பிர மம் பக்தானுக்கிரகார்த்தம் அருளுருக்கொண்டு ஆவிர்ப்பவி க்கு மென்று எழுதியது உள்ளபடியா? உள்ளபடியானல் அங்கு அருளே உருவாகி வருமென்றதற்கு விரோதமாய் இங்குமாயிக மென்ற தெதன்பொருட்டு? இஃதென்ன கண் மயக்கமோ? சுவேச்சையினாலே திருவருளே திருமேனியாக வெளிவந்தருளுகின்ற மாயாதீத சிவ மூர்த்திகளை மாயாசம் பந்தசரீரிகளென்று கூறியவாய் என்படும்? எழுதியகை என் படும்? நினைத்த நெஞ்சென்படும்? "குரத்தியைநினைத்த நெஞ் சைக்குமித்துரை நாவைத்தொட்ட,கரத்தினைப்பார்த்த கண் ணை" என்றதிற் போல ஸ்ரீமந் நடேசப் பெருமானே அவற் றிற்குரிய தண்டனை செய்வாராக.

ஆனல் மாயிகமல்லாத மாயாதீதமாகிய சுத்தப்பிரமமன் றோ நாம்? நம்மை மாயிகமான நடேச சகுணமூர்த்தியென் செய்யுமென்று நினைக்கின்றீரோ? அழகு! அழகு!! சிறிது ரோகாதிகள் வருங்கால் அகம்பிரமம் படும்பாடு அந்தோ உலகறியுமே. வெட்கம் வெட்கம். நிற்க, நீர்சகுணோபாசனை மாயிகமென்று எழுதினீரே, நம் கருத்தின்படி மாயிகமென்

பது சகுணத்தையா? சகுண உபாசனையையா? இதுவும் மெய்ம்மறதிதானோ? மாயையைக்கடந்துஉபாசிப்பதன்றோஉபாசனை? அங்ஙனமாகஉபாசனையின் றலையில் மாயையேறியது பெருவியப்பே! ஆனால் நீவிர் செய்யும் உபாசனைகள் அப்படியே போலும். இவ்வாறே நீர் எழுதுவன வெல்லாங் குழறுபடையென்பதை யாவரறியாதார்? இனி நாம ரூபமெல்லாம் மாயிகமென்றீரே. மாயாதீதமான பிர்மம் என்னும் நாமத்தின்கெதியும் அதுவென்றன்றோநீர் ஒப்புக்கொள்ளவேண்டும்? நீர் மேற்கொண்டதாகக்காட்டும் நிர்க்குணப்பிரமோபாசனைக்கு மன்றோ துர்க்கதி வந்து விட்டது. சகுணம் மாயிகமென்றெழுதி அதைத்தள்ளிவிட்டீர், நாமமும்மாயிகமென்றெழுதி நிர்க்குணத்தையுந் தள்ளிவிட்டீர். இதனால் இரண்டு கையும் விட்ட பெண்டுகளென்றுலகங் கூறும்பழமொழியைப் புதுக்கப் புக்கீர்போலும். அந்தோ! பரிதாபம். சிவசங்கர விருடபவாதி நாமங்களும் உமக்கு மாயிகந்தானன்றோ? ஆனால் நீர் வடக்கு நோக்கியிருந்து செபிக்கின்ற மந்திரந்தான் யாதோ? அதுவுமொரு நாமமாய் நுங்கருத்தின்படி மாயிகமா யொழியுமேல் செபத்தின் பலன் எப்படியாகும்? ஆகவே பயனற்ற காரியமே நும்செயலெல்லா மென்பது தெளிவாயது. நமதறிவெங்கே எழுத நினைத்த விஷயமெங்கேயென்ற சாவி ஓதுங்காமல் மனந்துணிந்து உமக்கு அசாத்திய வழியிலும் பிரவேசித்தவராதலால் நீர் பயனற்ற காரியஞ் செய்வீரா? என்

ணகொலோ கருத்தென்பீரோ? தெரிவிக்கவும் வேண்டுமோ? ஆனால் தெரிவிக்கின்றும். அதாவது அந்தரங்கவுண்மை தெரியாதார் உம்மைச் செப தியான தற்பர ரென்றுள்ளபடி நம்பிவந்தடுத்துபசரிக்கட்டுமென்ற கருத்தன்றி வேறில்லை யென்க. சகுணம் நிர்க்குணம் நாம ரூபமெல்லாம் மாயிக மென்றே துணிந்து அம்மட்டிலும் அமையாது எழுதவுஞ் செய்து அதனினும் அமையாது அச்சிடவுஞ் செய்து எங்கும் பரப்பிக் கூத்தாடுகின்ற நீர் செய்யுஞ் செபதியானதிகளை மேற்காட்டியபடியன்றி வேறென்றுயாவர் கூறுவர்? இதனை மறைக்க முடியாது அமைக.

இனி நாலாவது குறிப்பில் "பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தி யென்புந்திக்குளிந்திரசாலஞ் சாதிக்குதே. என்று தாயுமானாருளியிருத்தலைநண்பருணராததென்னோ" என்று எழுதினீரே. நண்பருணராத திருக்கட்டும். நீருணர்ந்ததென்னோ? அதைச் சற்றே விள்ளுகிர்பார்ப்போம். நீர்முதலில் தாயுமானார் யாரென்று அவர் சொரூபந் தெரிந்து கொண்டீரா? அது தெரிந்து கொண்டாலன்றோ அவர் சொற்குப் பொருளை அவர் நிலைமைக்கு விரோதமின்றிக் கூறலாம்? முதலில் இதனை யுணராதொழிந்தீர். அத்தாயுமானார் "தாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்" என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ" "ஆணவத்தோ டத்துவித மானதுபோல்" "அப்பொருளுமானாம் வும்" என்பன வாதிவாக்கியங்களாற்

பதிபசுபாச அநாதி நித்தியங்கூறிய சுத்தாத்துவித சைவசி த்தாந்தரத்தின மென்பதையு முணரா தொழிந்தீர், இவர் உலகெலாம் பொய்யென்று சத்காரிய விரோதமாகக் கூறுவரா என்பதும் உணராதொழிந்தீர். இவர், "அவ னவ ளது வெனுமவை மூவினைமையிற், றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா, "மந்தமாதியென்மனர் புலவர்" என்ற மெய்கண்ட சுருதிக்கும் விரோதமாக உலகெலாம் பொய்யென்பரா வென்பது முணராதொழிந்தீர். உலகெலாந் தோன்றி நின்றொடுங் குந் தன்மையையுடையதாதலாலும் அவை நானாவாய் மனசைக் கவர்ந்து நன்னெறிச் செல்ல வொட்டாது தடுக்கு மியல்புடையதாதலாலும் அவ்வியல்டைக் கடந்து செல்வார் அவற்றை வெறுத்து மிற்றலாலிழித்துக் கூறுவராதலாலும் அங்ஙன மிழிப்பதும் மனம்போனபடியன்று, ஏதுமோர் பொருத்தமுளதாகவே யிருக்குமாதலாலும், என்றும் ஒரேபடியாயன்றித் தோன்றிநின்றொடுங்குந் தன்மையதாதலால் பொய்யானவுலக மென்றுரென்பது முணரா தொழிந்தீர். இன்னுமிதின்னோ ரன்னபலவு முணரா தொழிந்தீர். இத்தனையில் ஒருணர்ச்சியு மில்லாத நீர் நண்பருணராதது தென்னோ என்று கூறியது கூடாவொழுக்கமே பூண்ட பொது மாதொருத்தி "அருந்ததி யாதி யருங்குல்மணிதனை, இருந்தைசெம் பொன்னை யிழிப்பது போலப், பொருந்திலா மொழிசில புகன்றிடல் நீராலுமே" என்பதன்றி வேறில்லை.

இனி உலகம் உண்மையில் பொய்யாயிருப்பது பற்றிய ன்றோ சிவஞான போதம் "உணருருவசத்து" "யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர்" என்று கூறியதென்றீரே, நன்றுநன்று. "கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தாற், பெற்றதாம் பேதையோர் கல்வி" என்று பெரியார் பணித்தபடி பிறர்பய டஞ் செய்யுங்கால் ஒளிநின்று கேட்ட அவ்வளவிலேயே அதுவே கடைசியாய் உமக்குச் சாதகமென்று வெளிவந்தீரே. கூத்தாடிகளுமன்றோ அறையிலாடிப் பழகிய பின் அம்பலத்திலாடுவார்கள்? நல்லது நீர் உமக்கு எதிரிகளாகிய எம்மவர்க்கு அதி முக்கிய உரித்தான சிவஞானபோத வாக்கியத்தைப் பிரயோகித்தால் இதனை மறுக்கமுடியாது மடங்கி விடுவார்கள். இந்தச்சொற்போர் முடிந்து விட்டதென்னுமாசை வசத்தராய் எழுதினீரே* இதனை, சூரபத்மன் வீரரெல்லாம் இறந்தொழிந்த பின் தனித்து நின்று முருகப் பிரானுடன் எத்தனையோ மாயா யுத்தங்கள் செய்து அவைகளுந் தொலைந்தவளவிலே "தெவ்வியலவுணர் மன்னன் செயிர்த்துமற் றிதனை நோக்கி, யிவ்வொரு கணத்தின் முன்ன மிவனுயி ருண்ப னென்றான்" என்றபடி மிக்க கோபங் கொண்டு க்ஷணநேரத்துள்ளே இவனுயிரை வாங்குவேனென்று கருதி யெல்லாந் தொலைந்த இச்சமயம் இதற்குபாயமிதுவே என்று நிச்சயி

---

* இதனை என்ற சொல், அடுத்த பக்கத்தில் மிகமகிழ்ந்து எற்றுக் கொண்டாம். என்பதனோடு முடியும்.

த்து; "கூற்றுயிர் குடித்த நோன்றாட் பண்ணவன் கொடுப்ப க்கொண்ட, மாற்றருந் திகிரி தன்னை வாங்கினன் வழிபட்டே த்திக், காற்றினுங் கடிது செல்லக் கந்தவேண் மீது விட்டா ன்," என்றபடி, முன்னாட் பரமசிவன் ஆபத்துக் குபிர்த்து ணையய்ங் கொடுத்த சக்ராயுகத்தை இது தப்பாதிவனுயி லை ர் வாங்கிவிடும் இனி இவ்வேலை முடிந்ததென்னுங் கருத்து டன் அச்சூரன் முருகப்பிரான்மீது பிரயோகிப்ப,

"விட்டிடு திகிரி யாரும் வெருக்கொள விரைந்து சென்று
கிட்டிய காலைச் செவ்வேள் கிளர்ந்ததோர் பாணி நீட்டி
வட்டணை நேமி தன்னை வருதியா லென்று பற்ற
வொட்டல னதனை நோக்கி யுளந்தளர்ந் துயிர்த்து நின்
[றான்."

என்றபடி சக்ராயுதம் நெருங்கி வந்தவளவிலே முருகப்பிரா ன் அது தங்களுடைய சொத்தாதலால் நேர்நோக்கிச் சக்கர மே அதிதுரூர தூர்க்கிருத்தியனுகிய சூரனிடத்தே அதிருப் தி யுற்றிருந்தாயன்றோ? இனி அது நீங்கி என்றும்போலத் திருப்தியுற்றே நம்மிடத்திருப்பாயாக, என்னுங் குறிப்பை வருதியாலென்ற வாக்கில் விளங்கவைத்துத் தமது திருக்கர த்தை நீட்டிவாங்கிக் கொண்டது போல மிகமகிழ்ந்து ஏற்று க்கொண்டாம்.

இனி இதனுல் உமக்குள்ள சாதகத்தை விசாரித்து ஒதுக்குகின்றும். அதனையும் உற்று நோக்குதிர், நீர்காட்டிய

சிவஞானபோதந் திருவாய்மலர்ந்தருளியவர் ஸ்ரீமெய்கண்ட
தேவ நாயனாரன்றோ? இவர் சைவசித்தாந்த சிவஞானோப
தேசம் சிவபிரானிடத்தே பெற்ற திருநந்தி பரம்பரைப்பர
ஞ்சோதி முனிவரிடத்தே சிவ தீக்ஷை பெற்றுச் சிவஞான
போத முபதேசிக்கப் பெற்றுப் பொல்லாப் பிள்ளையாரிடம்
சிவாகமங்கள் முழுது முபதேசிக்கப் பெற்றவரன்றோ? அத்
தகைய சிவாகமங்களினொன்றாகிய ரௌரவாகமபாசவிமோச
ன படலத்துள்ள சிவஞான போதமெனப் பெயரிய பன்னி
ரு சுலோகங்களன்றோ இவர் தமிழில் மொழிபெயர்த்தருளி
ய சிவஞானபோதம்? இது பதிபசுபாசங்கள் அநாதிநித்தியங்
களே என்பதை முதலில் பிரமாணவியல் இலக்கணவியல்க
ளால் மேற்கோள் ஏதுவகைகள் காட்டி வலியுறுத்தி, பின்
சாதனவியல் பயனியல்களால் ஆன்மா பாசமுத்தனாய்ப்பசு
த்துவ நீங்கிச் சிவத்துவப் பேறெய்தலாகிய சுத்தாத்துவித
நித்தியானந்த மேன்மையை விளக்குவதன்றோ? இங்ஙனமா
கவும் சற்காரிய வாதமே முடித்துக் காட்டும் இச்சிவஞான
போதம், நீர் உலகெல்லாம் பொய்யேயென்று சாதிப்பதற்கு
ச் சாதகமாகுமென்று அதிற் பிரவேசித்ததே உமதறிவின்
விசாலத்தை வெட்டவெளியாய்க் காட்டுகின்றது. நல்லது!
நீர்சொன்ன சிவஞானபோத முதற் சூத்திரத்தையாவது பார்
த்ததில்லையா? பார்த்திருந்தால் இந்த விபரீதம் விளையுமா? அச்
சூத்திரத்தில் "தோற்றிய திதியே யொடுங்கி மலத்து உளதா

ம்" என்றதன் பொருள் யாது? நீரே சொல்லும். முதலில் உலகம் உள்பொருள் என்றவர் பின் "உணருருவசத்து யாவையுஞ் சூனியம் சத்தெதிர்" என்பதில் இல்பொருள் என்பரா? என்றுவதூகிக்கலாமே. அதற்கவகாசமில்லையா? சிவஞானபோதம் முன்பின் விரோதமாக்கூறுமென்பது உமது கருத்தா? சிவபிரானுக்கு அதிப்பிரீதிகரமான தமிழருமையறியார் சிலர் புறக்கணிப்பது நோக்கி அக்கருத்து மேற்கொண்டீரா? அப்படியானல் இதற்குமுதனூலாகிய வடமொழிக்கும் அத்தோஷம்?ஏறுமே? ஏறினுல் வேதசிவாகமங்களுமன்றே அக்கதியினவாம்? ஆனுல் உண்மைதான்யாதோவெனில்? விபரீத புத்தியை முற்றும் விட்டு உள்ளபடி சிவபத்தியை மேற்கொண்டு சிவதீக்ஷாதி சிவசமஸ்காரம் பெற்றுப்பதிபசுபாச நித்திய சுத்தாத்துவித சைவசித்தாந்த நெறிப் புகுந்து தக்கார் வாய்க்கேட்டுத் தெளிக. அங்ஙனமன்றிச் சிவதீக்ஷா நியமம் வேண்டாது விவேகமுள்ளார்யாவராலும் உய்த்துணரக் கூடிய நுமது வாசிஷ்ட கைவல்லியாதிகள் போலச் சர்வசாதாரணமா யாவராலும் உணரக்கூடியதன்று.

இது வாஸ்தவமென்பதை, நீர் சூத்திரமுழுது முணரமாட்டாம லஞ்சிநின்றும் வஞ்சங்கொண்டு "உணருருவசத்து" என்பது மாத்திரங்காட்டிய சூழ்ச்சியாலும் வெளிப்படக் காணலாம். எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு அதுவே போதியது, சூத்திரமுழுதும் வேண்டியதில்லை என்பீர் போ

லும்; நல்லது. "எனின்" என்ற அடுத்த சொல்லையாவது சேர்க்கலாமே. சேர்த்தால், "உணருருவசத்தெனின்" என்று நின்று அன்வயாதி அபேக்ஷையின்றி ஒரு வாதியைநோக்கி "உணரப்படு முருவமெல்லாம் அசத்தென்பாயாகில்" எனப் பொருடந்து அதுவே அவாய் நிலையால் இன்ன காரணத் தால் நின் கருத்து மறுக்கப்படுமென்று முடிவுபெறு மாத லால் அது நம்கொள்கைக்குப் பாதகமாகு மென்றுதான் சேரா தொழிந்தீர்போலும். "எனின்" என்ற ஒரு சொல் பாதகம் விளைக்குமென்று பீதியுற்ற நீர் சூத்திரமுழுதும் எங் ஙன மெழுதுவீர்? நாமெழுதுகின்றும் காண்க. "உணருரு வசத் தெனி னுணராதின்மையி, னிருதிற னல்லது சிவசத் தாமென, விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே." இது வே அச்சூத்திரம். இது, ஆசிரியர் இந்நூலை, "பிரமாணவி யல் இலக்கணவியல் சாதனவியல் பயனியல் என நான்காக வகுத்துக் கூறும் வரிசையில். இலக்கணவியலில் பதியிலக்க ணங் கூறுகின்றது. பதிஇலக்கணங் கூறுதற் கெழுந்ததிச் சூத்திரமென்பது இம்மூலசூத்திரத்தின் கீழ் இதனையடுத்து நின்று இதன் கருத்துணர்த்துகின்ற கருத்தின துரையைப் படித்துப் பார்த்தளவே விளங்கக்கிடைக்கின்றதே! இக்கருத் தின் உரைமட்டிலாவது படித்துப் பார்த்து வெளிவரலாகா தா? இனியாவதுஇச்சூத்திரக் கருத்தின துரையிலுள்ள "ப திப்பொருளதிலக்கணங் கூறுதல் இவ்வாறுஞ் சூத்திரத்தின் கருத்து" என்றஒரு வரியையாவது படித்துப்பார்த்து இது

உமக்குச் சாதகமா பாதகமா என்பதை உற்று நோக்குதிர். "உணருருவெனின் அசத்துஉணராதெனின்-இன்மையின்" என அன்வயித்து முதற்பொருளாகிய பரமசிவம் அளவைகளான் அறியப்படும் பொருளெனின் அங்ஙனம் அறியப்படும் பிரபஞ்சம் போல அசத்தாகும். எவ்வாற்றானும்அறியப்படாதபொருளெனில் முயற்கோடு போலாம். ஆதலால் இவ்விரு திறனுமின்றி ஒருவாற்றான் அறியப்படுதலும் ஒருவாற்றா னறியப்படாமையுமாகிய இருவகையானும் சிவசத்தாமென்று கூறுவர் என்று பொழிப்புரைகாட்டி, பின்விளக்குமிடத்து"சடமாகிய சத்தினீக்குதற்குச் சிவசத்தென்றார்" என்று சிவஞான சுவாமிகள் விளக்கியிருத்தலே உரிய உத்தமர்களுணர்வார்கள். ஆகவே பாசமாகிய சடமும் அப்பாசத்தொன்றாய மாயையின் காரியமாகிய உலகமும் சத்தேயென்பது நிச்சயமாயது. சத்தே (உள்பொருளே) யாமென்பது தெளிவாய், இதனால்"பிரபஞ்சம்போல அசத்தாம்"என்றவிடத்தும் பிரபஞ்சம் என்றும் ஒரே படித்தாய் நிலைபெறெய்தாது தோன்றி நின்று ஒடுங்குமியல்பு பற்றி அசத்தென்றதேயன்றி, அது இல்பொருளென்று கூறியதன்றென்பது விளக்கமாயது. இதனை "உளதாம்" என்ற முதற் சூத்திரத்தாலும் தெளிக.

இனி "பாவையுஞ் சூனியஞ்சத்தெதிர்" என்பதுமாத்திரங்காட்டி இதுவும் உமக்குச் சாதகமென்று மகிழ்ந்தீர்.

"யாவையுஞ் சூனியஞ்சத்தெதிராசலிற், சத்தேயறியாத சத்திலதறியா, திருதிறனறிவுள திரண்டலாவான்மா." என்பது இச்சூத்திரம் சத்தாகிய சிவம் தன்னெதிர் பிரபஞ்சம் சூனியமாதலால் அதனை அறியாது. அசத்தாகிய பிரபஞ்சம் அறிவிலாத சடமாகலால் அச்சிவத்தை யறியாது. இவ்விரண்டையுமறியும் அறிவுள்ளது இவ்விரண்டுமல்லாத ஆன்மா. என்பதன்றோ இதற்குப்பொருள்? இதில் இவ்விரண்டையும் அறிவது ஆன்மா என்னுமிதனாலேயே பிரபஞ்சமும் உள்பொருளே யென்பதாயிற்று. ஆசிரியர் "ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென்றது" என்றருளிய மேற்கோளினாலும், ஆனால், "சூனியம" என்றதென்னையோ வெனின் இதனை "ஈண்டுச் சூனியமென்றது விளங்காமைப் பொருட்டென்பார் பிரகாசியாதென்றார்" என்று சிவஞான சுவாமிகள் விளக்கினமையாலும் ஆசிரியர் "மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்" என்றருளிய வதுவினாலும் "அன்னிய மிலாமையரற்கொன் றுணர்வின்று, மன்னிய மிலானசத்தைக் காண்குவனே—லன்னியமாக், காணுனவன்முன் கதிர்முன் னிருள்போல, மாணு வசத்தின்மை மற்று." என்றருளிய உதாரணத்தாலும் உரிய உத்தமர்கள் உண்மையுணர்வார்கள். சூரியன்முன் இருள்காணப் பெறுமையின் அதனை இல்பொருளென்பாரொருவருமில்லை. இஃதன்றியும் வேறெந்த நூல்களிலும் உலகம் பொய்யென்று

கூறுமிடங்கடோறும்இக்கருத்தே கொள்வர் சற்காரியவாத சைவசீலர்கள்;

சடமாகிய பிரபஞ்சமும் சத்தென்பதே சைவ நூற்றுணிபு மேனை நூற்றுணிபுமாயிருக்க, அதனையாண்டும் வெள்ளிடைமலைபோல விளங்கக்கூறுமை யென்னையோவெனிற் கூறுதும். எல்லா நூல்களும் வெளிப்பட பிரபஞ்சம் பொய்யென்றிடங்கடோறுங் கூறுவதும் விளக்குவதும் நிகழ்ச்சியிலிருந்தும், சீவர்கள் அப்பிரபஞ்சப்பற்றை விட்டு நீங்குவது துர்லபமாயிருக்கும்போது சத்தென்பதையாண்டும் வெளிப்படக்கூறுவது அப்பற்றின் விடுதிக்கு விரோதமாமென்பது பற்றியன்றிவேறில்லை. கீழ்க்கீழ்ச்சமயிகள் அவ்வநூலுணர்ச்சியால் நாளடைவிலே சிறிது சிறிது பரிபாகமுற்று அங்ஙனமே பிரபஞ்சப்பற்றும் சிறிது சிறிதாகநழுவப்பெற்றுப் பரிபாக முதிர்ச்சியில் சைவப்பிரவேச சிவதீக்ஷாதி சிவசமஸ்காரம் பெற்றுச்சைவநூற் போதனையாற் றெளிவுறுங்கால் அவர்கள்மனம் சடமாகிய பிரபஞ்சம் சத்தேயெங்பது நோக்கி அதனைச்சிறிதும் பற்றுவதின்றிச் சரியை கிரியா யோகிகளாய்ச்சிவஞானமுற்றுச் சிவனடியைச்சேர்வர். இவ்வுண்மையை,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம

வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.''

என்னும் பிரபல சுருதியானுங் காண்க.

இனி, (ரு) வது குறிப்பில்.

''ஆகின்ற தொண்ணூற்றோ டாறும் பொதுவென்ப
ராகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவ
மாகின்ற நாலேழ்வே தாந்தி வைணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே.

என்று திருமந்திரங் கூறுவதால் சைவர்க்கு தத்துவம் (௩௰௬) வேதாந்திக்கு (௨௰௮) வைணவர்க்கு (௨௰௪) மாயாவாதிக்கு (௨௰௫) என்று பெறப்படுவதாக நண்பர் சாஸ்திர ஆராய்ச்சியின்றி வேதாந்திகளை மாயாவாதியென்று நிந்திப்பது மாயாமயக்கென்பது சொல்லவும்வேண்டுமோ'' என்றெழுதினீரே, இதனால் இத்திருமந்திரங் கூறுகின்ற படி வரிசையாலும் தத்துவத்தின் எண்ணின் மிகுதியாலும் மாயாவாதிகளைக்குறித்து வேதாந்திகள் தரம் உயர்வென்பது தானே உமதுகருத்து? அதனையாரவர் மறுக்கின்றார்?

அது நிற்க. மாயாவாதி இன்னாரென்பது (16—10—11) ல் வெளி வந்த வைசியமித்திரனில் தக்கபிரமாணத்துடன் நிர்வி வாதமாகப் பிரகாசிக்கின்றது. ஈண்டுவிரிப்பதனாவ சியம். நீர் நான் மாயாவாதியல்ல, வேதாந்தியென்றே சொல்லிக்கொள்ளும். அவரவர் கொள்கைநோக்கி அறிவா ரறிக. உமக்குச்சாதகமென்று நீர் தேடிஎடுத்துக் காட் டிய திருமந்திரத்திற்கூறும் வரிசையாலும் தத்துவ எண் ணிறைலும் உம்மிலுமதிமேம்பாடுற்ற முதன்மைவாய்ந்த சுத்தாத்துவித சித்தாந்தசைவர்களை நீர் நிந்திப்பது எக்கருத் துப்பற்றியோ? இத்திருமந்திரத்தில் மற்றைச் சமயிகளுக் கு யாதொரு விசேடணமுமின்றிச் சைவர்களுக்கு மாத்தி ரம் அருஞ்சைவரென்று விசேடணங்கூறிய அருமையும் முதலில் வைத்தபெருமையும் நீரா உள்ளபடியறியவல்லுநர்? திருவருட் பரிபூரணராய் "அவ்வாறறிவாரறிகின்றதலர், லெவ்வாறெருவர்க் கிசைவிப்பதுவே," என்றார் பெரியோ ராதலின் அஃதம்மட்டிலமைக.

"மாணிக்கவாசகப்பிரபு,"மிண்டியமாயாவாதம்" என்று கூறியது சாங்கிய மதத்தையாம், இஃதறியாது மாணிக்கவா சகர் வேதாந்திகளை "மிண்டியமாயாவாதம்" என்று மறுத் துரைத்தாரென்பது மயக்குரையேயாம்" என்று எழுதித், தடுத்துச் சொல்வாரில்லையேல் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதை நன்று விளக்கினீர். மாணிக்கவாசகர் வேதாந்தி

களை மாயாவாதிகளெனக் கூறினாரென்று சொன்னாரொருவ ருமில்லை. அங்ஙனமாகவும் நீர் வேதாந்திகளை மறுத்துரைத் தாரென்பது மயக்குரையேயாமென்ற தெவ்வுரையோ? நல் லது உலகத்துக்கு முதற்காரணம் பிரமமே எனக்கொண்டு ஒன்றேயாய பொன் பலவித ஆபரணமென நானா வாயது போல அப்பிரமமொன்றே உலகமென நானாவாயது என்ப வர் நீரன்றோ? அங்ஙனம் நானா வாயதும் இப்பியில் வெள்ளி போல பிராந்தியேயன்றி வாஸ்தவமில்லை யென்பவர் நீரன் றோ? வாஸ்தவத்திலுள்ளது பிரமமொன்றே அப்பிரமம் நா மே யெனத்துணிந்து நான் பிரமமென்பவர் நீரன்றோ? ஜல சந்திர கடாகாசாதி உவமைகூறுபவர் நீரன்றோ? இன்னுமிவை போல்வன பற்பல கூறும் நும்போலிகளையே யன்றோ மாயா வாதிகளென்று நும்கொள்கையை அதிவிரிவாக ஸ்ரீமந்நடேச ப்பெருமானாற் புகழ்ந்து பாடப்பெற்ற ஸ்ரீஉமாபதி சிவாசா ரியர் எடுத்துக் கூறி ஒவ்வொன்றிலுமுள்ள பழுதுகாட்டித் தக்கஞாயத்துடன் மறுத்திருக்கின்றார்? அதனைச்சற்றே உற் றுப்பாரும்.

சங்கற்ப நிராகரணத்தில், "நவிற்றிய நிறையினவித் தையினோனுரை, நித்தனறிவன்......இன்ன தன்மையனே கன்......பொற்பணியியல்பினின்......சுத்திவெள்ளி யொத் தன மித்தையிற், றுனெனலாகுந்தன்மைத்து......தானே தானாய்த் தன்னிற் றன்னைத், தானே கண்டு தன்னலமுற்று,

வசையிறத் துவமசிபதத்தெளிவா, லகமே பிரமமாயினனே
னவறிந், தசலனுகிநற் சல சலமதியெனக், கண்டிடுமுடலம்
விண்டகல் கடத்து, மங்குல துடைதர வெங்குமாந் தகைத்
தே, அந்நிலை யன்றி யழிவறு முத்தி, யேயா தென்றுதன்
னியல்பை, மாயா வாதி வகுத்துரைத் தனனே." என்ற
மாயாவாதி சங்கற்பத்தையும், "உரைதருபிரமமொன்றெ
னு முரைக்கண், வருபிரமாண மறைபெனிலருமறை, யொ
ன்றென்ற தன்றி யிருபொரு ளுரைத்த, னன்றன்று......
"தற்பர விரிவு பொற்பணி தருமெனிற், செய்வோரின்றிச்
செய்வினை யின்மையிற்,பொன்பணி யாகை தன் பணியன்
றே, செய்வோர் போலா செயப்படு பொருண்முதல், செய்
வோ ரேயாச்செப்யவும் படுமோ, சுத்தி வெள்ளியிற்றோன்
றிற் றுயினுந், சத்துலகேதுந்தாராதருமெனி, லுலகமித்தை
யென்றோரா துரைத்தனை, நிலவுநின்மரபு நினைந்திலையாங்கொ
ல், விவகாரத்தில் வேண்டுது முலகம், பரமார்த்தத்திற் பகரா
மென்னிற், பரத்துளதேலிவையும் பரமார்த்தம், பரத்தில
தே லொழிமுன்பகர்மாற்றம்......தத்துவமசி யென வைத்
தமுப்பதத்திற், கொன்றே பொருளன் றென்றே பகர்வது,
நீபுலியாயினை யென்றுங்குணரி, லாயினை யென்றதாங்குவ
மைத்தா, னேபா யினமே லாயா யென்று, லகமே பிரம மா
யின தென்றுற், சகமே யறியத் தான்வே றன்றே, பன்னே
யாக்கை தன்னேயுற்றுடல், விடவருமென்று நடுநடுநடுங்கி,

விட்டோர் தெய்வத்தொட்டின்றன்றியும், யானே யெவரு மானே னென்றலி, னவ்வவர் சீறியவ்வவர் வாளுட், செவ் விதினிரையஞ் சேர்த்துவரதனுல், மாயாவாதப்பேயாவுனக் குத், தேவரி லொருவருண்டாக, மேவருநரகம் விடுத்தலோ வரிதே,'' என்ற மாயாவாதிசங்கற்ப நிராகரணத்தையும் நன் ருக உற்றுப் பார்ப்பீராளுல், "மிண்டியமாயாவாதம்'' என்ற சுருதியாற் கழித்தொழிக்கப்பட்ட மாயாவாதி நானல்லனெ ன்று தப்பிக்கொள்ள நினைக்கமாட்டீர், நினைத்துமாவதில்லை. இன்னும் நீர் நானல்லவென்று கொண்டாடினும் உத்தமரு ண்மை யுணர்வாராக. ஆகவே நீரும் நும்போலிகளுமே மா யாவாதிகளென்பது நிச்சயமே. இந்த நிச்சயம் இன்னும் பற்பல முன்னூல்களினுமுள்ளதே, விரிவஞ்சிவிடுத்தாம். ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள், "மிண்டியமாயாவாதம்'' என்றருளிய திருவாக்காற் கழித்தொழிக்கப் பட்டவர்கள் நீரும் நும்போலிகளுமே என்பது நிராக்ஷேபமே.

இனி, நுமது (சு)வது குறிப்பில் சாங்கியர் (மாயையை உலகிற்கு உபாதானகாரணமாக் கூறுவதுபற்றி அவரேமாயா வாதி. இனம்பற்றி மாயையை உலகிற் குபாதானமாகக் கூறும் வாதிகளும் மாயாவாதிகளாவரென்ப தீண்டுகேத் தறி யத்தக்கதாம்) என்று ஊகத்தன்மையே மேற்கொண்டெழு தினீர். சுத்தாத்து விதசைவசித்தாந்திகளாகிய எம்மவர்களு ம் நூல்களும் நும்மவர்களை மாயாவாதிகள் என்பதற்கு எதி

ரிடையாகச் சைவர்களே மாயா வாதிகளென்று நம்மவர் சிலர் நேரே சொல்லும் வழக்கம் பற்றுநது நீர் இனம்பற்றி ஊகிக்கத் தக்கதென்று கூறிய நம்மூகம் வியக்கத்தக்கதே. மாயை உலகிற்கு முதற்காரணமென்று கூறுஞ் சொல்லளவி னலே மாயாவாதியென்பதில்லை. அப்படியானல், வாதிகள் தத்தம் மதக்கொள்கை கூறுஞ் சொற்கள் பல. அவைகளா ல் அந்தந்த வாதிகளெனக் கூறவரும். அங்ஙனம் கூறுவா றெவருமில்லை. பெரும்பாலும் அவரவர் வழிபாடு நோக்கியே இன்னின்ன மதமென்ப துலகவழக்கும் நூல்வழக்குமாம். நீர் உலகிற்கு முதற் காரணம் பிரமமெனக்கொண்டு வழிபடு கின்றவர். பிரமம் நிமித்தமன்றி முதலாகாதென்பதும், முத ற்காரணமாயையே யென்பதும், முற்கூறிய வெகுபிரபலப் பிரமாணங்களாற் றெளிவாயது. ஆகவே முதற்காரண மெ ன்றே வழிபடும் நம் வழிபாடு மாயையின் பாற்படுமன்றி வேறில்லை யாதலால், நீரே மாயாவாதி யென்பது நம் வழி ப்பாடு நோக்கியுள்ளதே. இதன் விரிவு வைசியமித்திரன் புஸ்தகம் (க) இலக்கம் (கரு) பத்திரிகையில் விளங்குதலாலமைக. இதனுல் உலகிற்கு மாயை முதற்காரண மென்பார் சொல்லளவுபற்றி மாயாவாதிகளாகாரென்பது திண்ணமே. ஆதலால் ஊகத்தன்மையாலோ, மோகத்தன்மையாலோ நீருரைக்கும் பழுதுரைகளெப்பாற் செய்வன யாதுமின்றெ ன்க.

நல்லது மதங்களின் உயர்வு தாழ்வு தெரித்தற்குப் பன்னூல்களிற் பற்பல வாக்கியங்களுள்ளன. அவையெல்லாமிருக்க, மாயாவாதியாகிய நீர் உம்மதமே உமக்கு, விளங்காமல், உம்மை வேதாந்தி யென்றெண்ணிக்கொண்டு, வேதாந்திக்குயர்வு காட்டக்கருதி அவ்வேதாந்தத்தைக் காட்டிலும் தத்துவத்தால் எண்மடங்குயர்ந்தது சைவசித்தாந்தமென்று தெள்ளத் தெளிய விளக்குகின்ற திருமந்திரத்திருவாக்கை எடுத்துக்காட்டியது மிக நல்லதே; நீர் உமக்குச் சாதகமென்றெடுத்துக்காட்டிய திருமந்திரம் உம்மாற் சிரமேற் கொள்ளப் பெற்றதாயிருக்க, அதில் வேதாந்திகளைக் காட்டிலும் மிக்க மேம்பாட்டினர்கள், "அருஞ்சைவர்" என்று முதற்கண் வைத்தோதிய சிவாஞ்ஞையையுங் கடந்து, எம்மதங்களும், சிரமேற்கொண்டு வணங்குஞ் சமயாதீதசைவ சித்தாந்திகளைக்குறித்து (இனம்பற்றி மாயாவாதிகளாவரென்பதூகித்தறியத்தக்கதாம்) என்றெழுதியது, நும் மதத்திற் கொண்டுராபிமானத் தால் அருஞ்சைவர்களை இழித்துக் கூறக்கருதிய தூர் எண்ணமே தவிர வேறுண்டாகுமா? இதனால் வரும் திருமந்திரசிவாஞ்ஞையைக் கடந்த சிவாபராத தோஷமும், சைவநிந்தாதோஷமும் உம்மைப்பீடித்தற் கேதுவான இந்த வழியிற் பிரவேசித்த தூழின்றிறமேயாகும்.

காஞ்சிவாசியாரே! நீர் எழுதிமுடித்த ஆறுவது குறிப்பிறுதியில் எடுத்துக்காட்டிய உதாரணம்திருமந்திரமே. இம்

மட்டில் இதுவே ஈண்டு நீர் எடுத்துக்கொண்ட விஷயங்கட்குப் பரியவசானமாயது. இது நீர் நினையாதிருக்கவும் தானே வந்தமைந்ததோராச்சரியமெனக. இத்திருமந்திரம் அருளிச்செய்தவர் திருமூல நாயனார், இவர், கைலாசவாசர். மஹாசிவயோகர். அரிபிர மேந்திராதி தேவர் முனிவர் யாவராலும் வணங்கற் குரிய அறுபத்து மூன்று நாயன்மாரி லொருவர். அவர்களோ, பரமசிவன் பார்வதி ஸ்கந்தகணே சாதியராற் புகழ்ந்து பாராட்டப் பெற்றவர்கள். இது சிவரகசியாதி சிவ சாஸ்திரங்களாற் பிரசித்தமே. அத்துணைச்சிறந்த நாயன்மாரிலொருவராகிய இத் திருமூல நாயனாரைக் கொண்டு, இவரது சிவயோகானு பவத்தால் வருடத்துக் கொவ்வொன்றாக வெளிவரும் சிவானுபவத் திருவாக்காகிய இத்திருமந்திர மூலமாக, உத்தமோத்தம சுத்தாத்து விதசைவ சித்தாந்தத்தை எங்கும் விளக்கும் பொருட்டு, இவர் தமது கைலாசவாச திவ்யரூபத்தை மறைத்து, இடைக்கண்ண தாதலினோ! ஓர் இடையனாகிய மூலன் சரீரத்திற் பிரவேசித்தபடியே மானுடவடிவினராயிருக்கும்படி செய்வித்தவர் பரமசிவனே என்பது, உபயபக்தவிலாசங்களாலும் எப்புராணங்கட்கும்பெரிய புராணத்தாலும் தெளியப்பெறும். ஆகவே இத்திருமூலநாயனார் சுத்தாத்துவித சித்தாந்த சைவாசாரியரென்பது எவராலு மறுக்க முடியாது முடிந்த சித்தாந்தமே.

நீர் இவர் அருளிச்செய்தநூலை ஒப்புக்கொண்டு எடுத்துக்காட்டியதனால் இவரைச் சிரமேற்கொண்டவராகின்றீர்.

இந்நன்மைநோக்கி இம்மட்டில் எமக்கினமாகவும்அபிமானிக் கப் பெறுகின்றீர். இதனாலும், "தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால், அம்மை, யெரிவாய் நிரையத்து வீழ்வர்கொ லென்று, பரி வதூஉஞ்சான்றோர்கடன்" என்ற பெரியார்வாக்கைக்கடைப் பிடித்தும், இப்பொழுது நாம் உமக்குக் கூறும் நன்மையைச் சற்றே உற்றுக் கேட்பீராக. நீர் திருமூலநாயனாரையும் திரு மந்திரத்தையும் சிரமேற் கொண்டு பற்றிநிற்பதைக் காட்டி லும் நமது கோட்காதரவென்றே நீரெடுத்துக்காட்டிய திரு ப்பாசுரத்தில் அதிகப்பற்றுடையரல்லவா? அங்ஙனம் பற்றி நிற்கும் பாசுரத்தின் ஆணையைக்கடக்க நினைத்தால் அதுவும் மனச்சாக்ஷிக்கும் விரோதமாகிப் பெரும் பாதகத்தை விளை க்குமல்லவா? வீணாகப்பிடித்ததே சாதிக்கு மூகபுத்திவேண் டாம். மேற்காட்டியபடி அகம்பிரமக்கூற்று முதலிய கோட் பாட்டினன் மாயாவாதி யாகிய உமக்கும் உம்மின் மேம்ப ட்ட வேதாந்திகளுக்கும் எத்தனையோ மேம்பாடுள்ளார்."அ ருஞ்சைவர்" என்று அத்திருப்பாசுத்தில் விளக்கிய சைவசி த்தாந்திகளை வழிபட்டுய்ய வேண்டியதை மறந்து மேலும் நிந்திப்பது நல்ல புத்தியாகுமா? நாம் சைவர்களை நிந்தித்த தெங்கென்பீராகில், நீர் நிந்திக்கின்ற வினையிடமெல்லாந்தேடி எடுப்பானேன்? இவ்விடத்தில், (இனம்பற்றி மாயையை உபாதான மென்பாரும் மாயா வாதிக ளென்றாகித்,தறியத்

தக்கதாம்) என்றதே போதாதா? உலகிற்குபாதான காரணம் மாயையே என்று சைவர் கூறுவது பிரசித்தமே. அது வாஸ்தவமே. சிவசாஸ்திரசம்மதமே. (உபாதானம் மாயையென் பாரு மாயாவாதிகளே) என்கிற நம்மூக புத்திதிருமூல நாயனருக்கில்லையா? இருந்தால், உபாதானம் மாயையே என்கிற சைவர்களை மாயாவாதிகளென்று சொல்லாரா? இப்பாசுரமிருக்கட்டு மித்திருமந்திரத்தில் வேறெங்காவது சைவர்களை மாயாவாதிகளென்று சொன்னதுண்டா? அல்லது தம் நூல்களிலேனுமுண்டா? இன்னும் சைவர்களை மாயாவாதிகளென்பதற்கிடமிருந்தால் ஏனைமதமெல்லாந்தன் கீழ்ச் சோபானங்களேயாக சைவம் தனக்குமே லொன்றில்லாமல் முன்னிற்பதென்பதை விளக்க முதலில் வைத்தும் "அருஞ்சைவர்" என்றும், அதன் கீழ்ப்பட்டனவே வேதாந்தமுதலியன வென்பதையும்விளக்கிமாயாவாதியை வேறுபிரித்தோதுவரா? இவையெல்லாம் நம்மூக புத்தியைச் சற்றே தெளிவித்து நோக்கப் படாதா? இனியாவது நிந்தனை யொழிந்து உண்மைகடைப் பிடித்துய்வீராக.

இதுவரை நாமெடுத்துக்காட்டிய பிரமாணங்கள் நீர்காட்டிய சிற்சில நாற்பெயர் மாத்திரம் போல்வனவல்ல, பிரபல சுருதிவாக்கியங்களே. அவை, ஸ்ரீமந் நடேசப்பெருமானால் ஒப்புக்கொண்டுபுகழ்ந்துபாராட்டப்பெற்ற உமாபதிசிவமுதலிய சிவாநுபூதிப் பெருஞ்செல்வர்களின் திருவாக்குக்

களை. இவற்றை ஒப்புக்கொண்டால் நாம் பிடித்தபிடிக்குப் பழுதுவருகின்றதேயென்று நினைத்து, உறைத்துப் பழகிய பழக்கமேலீட்டினால் ஒருவாறு இப்பிரமாணங்கள் எமக்குடன் பாடல்லவென்று கூறத்துணிவீரானால்? உமக்குப் பிரபல சுருதிகளெல்லாம் உடன்பாடல்லவாய், அவற்றைத் திருவாய் மலர்ந்தருளிய உமாபதி சிவ முதலியோரும் அப்படியாய், அவரை ஒப்புக்கொண்ட நடேசப்பெருமானும் அப்படியாய், அவரின் வேறாகாத பரப்பிரமமும் அப்படியாய். நீர் முழுப் பாசண்டியாய், நீர் நடேசப் பெருமானைச் சிதம்பரந் தேடியோடிக் கும்பிடுவதுஞ் சுத்தப் புரட்டாய், இன்னுமெத்தனையோ சிவத்துரோகங்களுக்கெல்லா மிடமாகும். ஆதலால் இதனாற் பிடித்தபிடி நழுவுகின்றதே என்று நோக்கிப்பதறாமல் சித்தசமாதானஞ் செய்து நாளடைவிலேயாவது பரியாலோசித்து நன்மைகடைப்பிடித் துய்வீராக

(தேவாரம்) திருச்சிற்றம்பலம்.

இழைத்தநா ளெல்லை கடப்பதன்றா லிரவினொடு நண்பகலு மேத்தி வாழ்த்திப், பிழைத்தவெலாம் பொறுத்தருள்செய் பெரியோ யென்றும் பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா வென்று, மழைத்தலறி யடியேனுன் னரணங் கண்டாயணியாரூர் வீற்றிருந்த வழகா வென்றுங், குழற்சடையெங் கோனென்றுங் கூறு நெஞ்சே குற்றமில்லை யென்மேனான் கூறி னேனே. திருச்சிற்றம்பலம்.

காஞ்சிவாசியாரே! நீர் இனியாவது சித்தசமாதானமாகி யுபசாந்தியுற்று நன்மைகடைப்பிடித்துய்யுங்கருத்தை மேற் கொள்ளாது, இன்னும் விரோதமேபாராட்டி மறுப்பெழுதப் புகுந்தால், முன்போல வஞ்சித்தெழுதாது, நாமெழுதியவிஷ யங்க ளொவ்வொன்றும் முழுது மெடுத்துக்காட்டி, ஆங்காங் கு நாம் காட்டியுள்ள பிரபலசுருதிப் பிரமாணங்களுங்காட்டி, அவ்விஷயங்கட்கு அந்தப் பிரமாணங்கள் பொருந்தாதென் றுவது, அவற்றின் வாக்கியார்த்தங்கள் சரியல்லவென்றுவது விளங்கத் தெரித்துப், பொருந் தாமைக்கும் சரியல்லவென்பத ற்கும் தக்கஞாயங்காட்டிச், சரியான அர்த்த மின்னதென்ப தும் காட்டி ஒழுங்குபெற எழுதுவீராக. இவ்வாறன்றி முன் போல நும்மனம்போனபடி எழுதுவீராகில் அவை கவனிக் கப்படா வென்பதறிவீராக. வைசியமித்திரனும் சத்தியவாக் கியுமென்று தலைப்பெயர் காட்டி, லோகோபகாரியில் நீர் பின்னரெழுதியனவும் பின்வரக்கண்டாம். மேற்காட்டியபடி மித்திரனில் நாமெழுதியன முழுதும் எடுத்துக்காட்டி ஒழுங் குபெறவெழுதானமயின், அவற்றிற் பிரவேசித்தல் பாழ்ங் குப்பையைக் கிளைத்தல்போலாமென் றமைந்தாம்.

இங்ஙனம்

சத்தியவாக்கி.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 13 | சபாசு | சபாசப் |
| ஷை | 17 | கத்றிற் | காற்றிற் |
| 7 | 2 | உம்மிஷ்ட்டப்படி | உம்மிஷ்டப்படி |
| 10 | 4 | யெனறும் | யொன்றம் |
| ஷை | ஷை | யென்றும் | யொன்றும் |
| ஷை | 5 | யென்றம் | யொன்றும் |
| 31 | 2 | அனுவசிம் | அனுவசியம் |
| 15 | 21 | டெறுபய | பெறும்பய |
| 28 | 8 | ஊயா | ஊயா |
| 34 | 14 | விருடப | மிருடப |
| 37 | 5 | பிறர்பய | பிறர்பா |
| s39 | 23 | உளத | உளதா |
| 46 | 14 | இன்றதலர் | இன்றதலா |
| 50 | 6 | தத்ர்ம் | தத்தம் |
| ஷை | 8 | றெவரு | ரெவரு |
| 53 | 17 | பாசுத்தில் | பாசுரத்தில் |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

உ

இந்நூல், சத்தியவாக்கியரால் சில காலத்துக்குமுன் செய்யப்பெற்றதாகத் தெரிகிறது. இதில், ஒரு சிறிய ஆரம்ப பாகம் வைசியமித்திரனில் முன் வெளிவந்தது. நெடுநாளாகியும் மற்றைப்பாகங்களும் தொடர்ந்துவந்தில. எனையன பற்பல தொடர்ந்து வெளிவருதற்கிடங்கொண்ட மித்திரனில், இது முழுதும் வெளிவருதற் கிடம்பெருமை சைவாபிமானத்திற் கியைவதன்று. ஆரம்ப பாகத்தை மித்திரனில் பார்த்தபொழுது, அதனிறுதியிற் கண்ட, மற்றைப் பாகமுழுதும் பார்க்க விரும்பிய யான், அவை முழுதும் இப்பொழுதுதான் கிடைக்கப்பெற்றுப் பார்த்து, இந்நூல் லோகோபகாரமாதலால், இதனை வெளியிடக்கருதி, இதன் ஆரம்பபாகம் மித்திரனிலிருக்கிறதைச் சுருக்கி விளக்கி முதலிற் சேர்த்து மற்றவை முற்றும் அவரால் எழுதப்பெற்றிருந்தபடியே அச்சிற் பதிப்பித்தேன்.

வே. நடேசபிள்ளை.